Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

JUN 2004
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மொறாயஸ் ஒளிச்சுடர்
பல்,மூக்குக் கண்ணாடியகம்
இல.05, பலாலி வீதி (அப்பலோ கிளினிக் முன்),
யாழ்ப்பாணம்.



- பல் கட்டுவதற்கும்,
- பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
- இலவச கண் பரிசோதனை செய்து, நவீன ரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.

[1962 முதல் யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது.]

(சி/2494)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 வைகாசி 24 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ர.ஆசிர் 17 (06.06.2004) ஞாயிற்றுக்கிழமை இதழ் :248



தமிழ்த் தேசிய கூட்டமைப்பினருடனான சந்திப்பின் போது சு.ப.தமிழ்ச்செல்வன்.



அன்புச்சோலை பேணலகத்தின் புதிய தங்ககத்தை தேசியத் தலைவர் பிரபாகரன் நேற்று முன்தினம் நாடாவை வெட்டி திறந்துவைத்தபோது.

# நாடாளுமன்றுக்கு உள்ளும் வெளியிலும்

# கூட்டமைப்பினர் தீவிரமாகச் செயற்படுவர்

## கிளிநொச்சி சந்திப்பில் முடிவு

(கிளிநொச்சி)

**எதிர்காலத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு முன்னெடுக்கவேண்டிய வேலைத்திட்டங்கள் குறித்தும் -**

**சமாதான முயற்சிகள் கேள்விக் குறியாகியுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில், நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும், வெளியேயும் கூட்டமைப்பின் செயற்பாடுகளை தீவிரமாக முன்னெடுத்துச் செல்வது தொடர்பாகவும், தாம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் ஆராய்ந்ததாக தமிழீழ அரசியற் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.**

நேற்றுக்காலை 10.30 மணியவில் கிளிநொச்சியிலுள்ள அரசியற்துறை நடுவப்பணியகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. சுமார் 4 மணிநேரம் நிகழ்ந்த இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்ட விடயங்கள் குறித்து அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கருத்துத் தெரிவிக்கையில் -

தற்பொழுது சமாதான முன்னெடுப்புக்கள் ஒரு கேள்விக்குறியான நிலைக்கு தள்ளப்பட்டுள்ள சூழலில்தான் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு எப்படியான நடைமுறையினை மேற்கொள்ள வேண்டும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ மாணவர் எழுச்சிநாள் இன்று அனுஷ்டிக்கப்படுகிறது!

(கொழும்பு)

தமிழீழ மாணவர் எழுச்சிநாள் இன்று யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

தமிழ் மக்கள் மீதும், மாணவர்களினதும் கல்வியிலும் சிங்களப் பெரும்பான்மை அரசு திட்டமிட்டு மேற்கொண்டுவந்த, புறக்கணிப்புக்கு எதிராக குரல்கொடுத்து, வீரச்சாவடைந்த சிவகுமாரனின் நினைவுநாளை தமிழீழ மாணவர் எழுச்சி நாளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த மாணவர் எழுச்சி நாள் நிகழ்வுகளை யாழ்.குடாநாட்டில் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிப்பதற்கான செயற்பாடுகளை தமிழீழ மாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ளது.

குடாநாட்டில் பிரதேச ரீதியாக எழுச்சிக் கூட்டங்களையும், பேரணிகளையும் நடாத்த ஏற்பாடாகியுள்ளதாக

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதியமைச்சரைக் குறிவைத்து நேற்று துப்பாக்கிப் பிரயோகம்!

## புலிகளிடம் இரண்டு விமானங்கள்; நம்பகமான தகவல் கிடைத்துள்ளதாம்!

# பிரதியமைச்சரைக் குறிவைத்து நேற்று துப்பாக்கிப் பிரயோகம்!

(கொழும்பு)

இளைஞர் விவகார விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் ஸ்ரீபதி சூரியாச்சாரியின் அலுவலகத்திற்கு அருகில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பிரதி அமைச்சரின் மெய்ப்பாதுகாவலர் ஒருவரும், பாதாள உலகக் கோஷ்டியைச் சேர்ந்த ஒருவரும் உயிரிழந்தனர்.

நேற்று நண்பகல் களனிப் பகுதியில் அமைந்துள்ள கிரிபத்கொட கோகல வெல என்ற இடத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

நேற்று நண்பகல் பிரதியமைச்சரின் அலுவலகத்தில், அமைச்சின்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளிடம் இரண்டு விமானங்கள்; நம்பகமான தகவல் கிடைத்துள்ளதாம்!

## விமானப்படைத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளிடம் இரண்டு இயங்கு விமானங்கள் இருப்பது குறித்த நம்பகமான தகவல்கள் தமக்குக் கிடைத்திருப்பதாக விமானப்படைத்தளபதி எயர் வைஸ் மார்ஷல் டொனால்ட் பெரேரா தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளிடம் மூன்று சக்கரங்களைக் கொண்ட 'அல்யாலைட்' விமானங்கள் இரண்டு இருக்கின்றன.

இந்த இரண்டு சிறிய விமானங்கள் பற்றிய தகவல்களை, கடற்படையினரின் படகுகளிலுள்ள ரேடா கண்காணிப்புக் கருவிகளில் பதிவான சமிக்ஞைகளில் இருந்து உறுதிப்படுத்தியுள்ளோம்.

தனி ஒரு விமானியால் செலுத்தப்படும் இந்த விமானத்தின் உதிரிப் பாகங்கள் வெளிநாடுகளில் இருந்து கொண்டுவரப்பட்டு வன்னியில் வைத்து பொருத்தப்பட்டிருக்கலாம் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அத்துடன் இரணைமடுப் பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும் மூவா

(12 ஆம் பக்கம் பார்க்க)

# மேலதிகாரியை சுட்டுக் கொன்றபின் இராணுவ கோப்ரலும் தற்கொலை!

## கேரதீவு முகாமில் சம்பவம்

(யாழ்பாணம்)

தனது மேலதிகாரி ஒருவரைச் சுட்டுக் கொன்றுவிட்டு, இராணுவக் கோப்ரல் ஒருவர் தானும் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் ஒன்று - தென்மராட்சி, கேரதீவு இராணுவ முகாமில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

கேரதீவு இராணுவ முகாமில் பணியாற்றிய, கோப்ரல் அஜித் குமார சௌனவிரத்தின என்பவர் தனது மேலதிகாரியான சார் கஸ்ட் குமரசேகர வசந்தலியனகே என்பவரை நேற்று முன் தினம் நள்ளிரவு 12 மணியளவில் சுட்டுக் கொன்றார்

இதனையடுத்து கோப்ரல் அஜித குமரசௌனவிரத்தின (வயது-19) தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

விடுமுறை வழங்காததாலேயே கோப்ரல் அஜித் குமார தனது மேலதிகாரியைச் சுட்டுக் கொல்வதற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

இவர் தற்கொலை செய்து கொள்ள முன்னர் கடிதம் ஒன்றை எழுதி வைத்திருந்ததாகவும் கூறப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுக்கு இடைக்கால நிர்வாகத்தை வழங்குவது ஆபத்தான நடவடிக்கையாம்

## அனுருத்த ரத்வத்த கூறுகிறார்

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் கோருவது போன்று, இடைக்கால நிர்வாகத்தை வடக்கு - கிழக்கில் ஏற்படுத்துவது ஆபத்தானதென்று, முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் முக்கியஸ்தருமான, ஜெனரல் அனுரத்த ரத்வத்த தெரிவித்துள்ளார்.

'திவயின' பத்திரிகைக்கு அவர் வழங்கிய பேட்டி ஒன்றிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது -

ஒரேநாட்டைச் சேர்ந்தவர்கள் என, ஏற்றுக்கொண்டு வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்தினால், (12 ஆம் பக்கம் பார்க்க)




இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

(சி/2489)

EXPOAIR

Your friend in the skies...

# தமிழரின் அபிலாசையை வெளிப்படுத்த மாணவர் எழுச்சிநாளில் அணிதிரள்வோம்

## உயர் தொழில்நுட்ப நிறுவக மாணவர் ஒன்றியம் அறிக்கை

தமிழ்த்தேசிய இனத்தின் அபிலாசைகளையும்,தமிழ் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும், அரசுக்கும், சர்வதேச சமூகத்துக்கும் உணர்த்துவதற்கு மாணவர் எழுச்சி நாளான இன்று அனைத்து மாணவர் சமூகத்தினரும் ஒன்றுபடுவோம்.

இவ்வாறு உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவக மாணவர் ஒன்றியம் இன்று நடைபெறவுள்ள மாணவர் எழுச்சிநாள் குறித்து வெளியிட்ட அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது-

காலம் காலமாக அடக்கி ஒடுக்கப்பட்டு வந்த தமிழ்த்தேசிய இனம் அடிக்கடி எழுச்சிகொண்டு தமிழ்த்தேசியத்தின் ஒற்றுமையின் மூலம் எமது அபிலாசைகளையும், கோரிக்கைகளையும் அரசுக்கும், சர்வதேச சமூகத்துக்கும் பல்வேறு வடிவங்களில் எடுத்துரைத்துவருகின்றது. அந்தவகையில் மீண்டும் ஒரு தடவை மாணவர் எழுச்சிமூலம் எமது அபிலாசைகளையும், கோரிக்கைகளையும் ஒரேகுரலில் எடுத்துரைக்க தமிழீழ மாணவர் சமூகமே அணிதிரளுங்கள்.

தமிழ்த்தேசிய இனத்தினுடைய விடுதலைப்போராட்டம் ஆரம்பிக்க முன்னர் இருந்து, இன்று வரைக்கும் காலம் காலமாக எம்மை அடக்கி ஒடுக்கிய சிங்களப்பேரினவாத அரசுகள் தமிழ் மாணவர்களின் கல்வியை ஏதோ ஒரு வடிவத்தில் நசுக்கிக்கொண்டே வந்துள்ளன. இவற்றில் எதனையும் நாம் அனுமதிக்க முடியாது.

குறிப்பாக தமிழ் மாணவர்களின் உயர்கல்விக்கு உலைவைப்பதற்காக சிறிமாவின் அரசு அறிமுகப்படுத்திய தரப்படுத்தல் முறை தமிழ் மாணவர்கள் அனைவரையும் பாதிப்புக்குள்ளாக்கியது. இதன்போது அதற்கு எதிராக பல செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக தன்னை தமிழ் மாணவர் பேரவையில் இணைத்துக் கொண்டவர்தான் அண்ணன் சிவகுமாரன். தரப்படுத்தல் முறையை எதிர்க்கும் பல நடவடிக்கைகளை இனவாத அரசிற்கு எதிராக மேற்கொண்டவர் இவரே.

தமிழ் மாணவர்களிற்காக பல்வேறு போராட்டங்களை நடத்திய இவர் 1974 ஆம் ஆண்டு யூன் மாதம 5 ஆம் நாள் பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டபோது, தான் உயிர் தப்பமுடியாத சந்தர்ப்பத்தில் தனது பேனாவிலே மறைத்து வைத்திருந்த 'சயனைட்டை' உட்கொண்டு சாவடைந்தார். அவரின் இறுதிக் கிரியைகள் நடைபெற்ற தினமே தமிழீழ மாணவர் எழுச்சி நாளாக மாணவர் சமூகத்தினால் அனுஷ்டிக்கப்படுகின்றது.

இவரின் மரணத்தைத் தொடர்ந்து விஸ்வரூபம் எடுத்தது, ஈழத்தமிழரினுடைய சுதந்திரப்போர். அன்றிலிருந்து இன்றுவரை தொடர்ச்சியாக எமது மாணவர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு வருகின்றன. இன்று ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலையானது தமிழ் மக்களினுடைய பலத்தினால், தமிழீழ விடுதலைப் புலிகளின் பலத்தினால் உருவாக்கப்பட்டது. இன்று நடைமுறையில் உள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையானது 17 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாவீரர்களின் இரத்தத்தால் எழுதப்பட்டது.

இவ்வாறான பலம் மிக்க எமது விடுதலைப் போரட்டத்தை புரிந்துகொள்ளாத பேரினவாத அரசுகள் எம்மை ஏமாற்றமுற்படுகின்றன. புதிதாக ஆட்சிபீடம் ஏறியுள்ள சந்திரிகா அம்மையாருடைய அரசு பேச்சுவார்த்தையை தொடங்க பின்னடிப்பது வெறும் புதிராகவே உள்ளது. புரிந்துணர்வு உடன்படிக்கையிலே கூறப்பட்ட விடயங்கள் இன்னும முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. இன்னும் எத்தனையோ பாடசாலைகள் இராணுவமுகாங்களாக காணப்பகின்றன. மாணவர்கள் சுகந்திரமாகச் சென்று கல்வி கற்க முடியவில்லை.

உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையிலே எத்தனையோ பாடசாலைகள் மூடப் பட்டுள்ளன. இதன் மூலம் எமது மாணவர்களினுடைய உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன. மக்களுடைய இயல்புவாழ்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் எமது பிரச்சினைகளையும், அபிலாசைகளையும், கோரிக்கைகளையும் அரசுக்கும், சர்வதேச சமூகத்துக்கும் எடுத்துரைப்பதற்காக இன்று தமிழீழ மாணவர்கள் ஒற்றுமையுடன் அணிதிரள் வோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குளத்தில் மூழ்கி சிறுமி மரணம்

(கிளிநொச்சி)

வட்டக்கச்சி பெரிய குளம் பகுதியில் குளத்தில் மூழ்கி சிறுமி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

புளியம்பொக்கணை நாகேந்திரபுரத்தைச்சேர்ந்த தியாகராசா லக்ஷிகா (வயது-11) என்பவரே உயிரிழந்தவராவார்.

குளத்தில் நீராடுவதற்கு குடும்பத்தினருடன் சென்ற மேற்படி சிறுமிமே, நீரில் மூழ்கி காணாமற்போய் பின்னர் அயலவர்களின் உதவியுடன் சடலமாக மீட்கப்பட்டவராவர்.

## பிரதேச செயலர் ஓய்வு

கரவெட்டி பிரதேச செயலர் எஸ். கனகரத்தினம் சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளார். இந்தப் பிரதேச செயலக நிர்வாக அதிகாரி எஸ். சோமசுந்தரம் பிரதேச செயலகப் பொறுப்புக்களை பொறுப்பேற்றுள்ளார். வெகுவிரைவில் புதிய பிரதேச செயலர் ஒருவர் நியமிக்கப்படுவார் எனத் தெரிவிக்கப்பட்டது. (17)

### மணமகள் தேவை

யாழ்.கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 29 வயது மருத்துவருக்கு, மருத்துவ மணமகள் தேவை மணமகனின் தாய், அக்கா, அக்கா கணவர் வைத்தியர்கள். தொடர்பு:- நல்லூர் முருகன் திருமண சேவை நல்லூர் மணியம் 82/2/1 ஆட்டுப்பட்டித் தெரு கொழும்பு - 13 T.P. 2381299, 2360733, Fax. 4610815 *(748)*

### வாடகைக்கு

அரச உத்தியோகத்தர்களுக்கும், பல்கலைக்கழக மாணவர்களுக்கும், வெளிமாவட்ட உத்தியோகத்தர்களுக்கும் யாழ். நகரில் உள்ள வீட்டில் தனியறைகள் வாடகைக்கு கொடுக்கப்படும். 10.06.04 இற்கு முன்பாக முழுவிபரத்துடன் தொடர்பு கொள்க. விளம்பர இலக்கம் -25 மே/பா. நமது ஈழநாடு, 267, நாவலர் றோட் ,யாழ்ப்பாணம். (750)

### மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு

வட்டக்கச்சி 10 வீட்டுத்திட்ட மக்களுக்கும்,சிவிக்சென்ரர் மக்களுக்கும் மீளக்குடியமர்வுக் கொடுப்பனவாக 25 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

மேற்படி கொடுப்பனவு வட்டக்கச்சி, கரைச்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவுச்சங்க கிராமிய வங்கியில் வைத்து வழங்கப்பட்டது.

நாகம்ஸ் சுன்னாகம்
மாற்றியமைக்கப்பட்ட டொல்பி ஒலி அமைப்புடன்
விஜய், திரிஷா, பிரகாஷ்ராஜ் நடித்த
கில்லி (நீல்ஸ்)

(சி-2622)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு 11.00, 3.00, 7.00, 10.00

நிறைஞ்சனாஸ் சங்கானை
கார்த்திக், ரோஜா, மணிவண்ணன் நடித்த
இன்று முதல்
சின்னராஜா
காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.(பு.நே.)
வெள்ளி,சனி,ஞாயிறு இரவு8.45 (பு.நே)
AMERICAN PIE
(சி-2621)

ராஜா யாழ்ப்பாணம்.
3 ஆவது வாரமாக
இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடான
சூர்யா, சித்தார்த், மாதவன், மீரா ஜாஸ்மின், திரிஷா நடித்த
ஆய்த எழுத்து

காட்சிநேரம்:-10.30, 2.30,6.30 மட்டும் (பு.நே)
(சி-2623)

ராஜ் தொலைத்தொடர்பு
கல்வியங்காட்டில் புதிய உதயம்
ராஜ் தொலைத்தொடர்பு நிலையம் உலகெங்கும் வசிக்கும் உங்கள் உறவுகளுடன் பேசிமகிழ INTERNET மூலம்-
நிமிடத்திற்கு ரூபா-7, இரவு 7 மணிக்கு பின் ரூபா-5.
உள்ளூர் அழைப்பு நிமிடத்திற்கு ரூபா-8. இரவு 6 மணிக்குப் பின் நிமிடத்திற்கு ரூபா-5.
ராஜ் தொலைத்தொடர்பு நிலையம்
ஆடியபாதம் வீதி,
கல்வியங்காடு
தொலைபேசி - இல - 021-2225606
021-4590746
(C/2643)

## வரணி மகாவித்தியாலயத்தில் 10 லட்சம் ரூபா செலவில் மாடிக்கட்டடம்

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் நிதியுதவியுடன் வரணி மகாவித்தியாலயத்தில் 10 லட்சம் ரூபா செலவில் மாடிக்கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

இந்தக் கட்டடவேலைகள் முடிவடைந்ததும், வித்தியாலயத்தில் நிலவும் வகுப்பறைப் பற்றாக்குறைகள் நீங்கும் எனத்தெரிவிக்கப்படுகிறது.

இந்த வித்தியாலயத்தில் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் சுமார் 5 லட்சம் ரூபா செலவில் மலசலகூடத் தொகுதியை நிர்மாணித்துள்ளதாக வித்தியாலய அதிபர் கே.சுப்பிரமணியம் தெரிவித்தார்.



ஆழியவளை திலீபன் மருத்துவசேவை இரண்டாவது ஆண்டு நிறைவு விழாவில் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை மருத்துவ போராளி ஈழவாணிக்கு பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# பணி நிலை வேண்டுகை

யாழ். மாவட்டத்தின் சந்தைகளுக்கான வரி அறவீட்டாளர் பணி நிலைக்கு ஆண்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. எனவே, சந்தைகளில பணிபுரிய விரும்புவோர் தன்வரலாறு அடங்கிய விளக்கங்களுடன் 2004. 06. 09 ஆம் நாள் நடைபெறவுள்ள நேர்முகத் தேர்வுக்கு வருகைதருமாறு வேண்டுகிறோம்.

*பணிநிலை:-*

I. காப்பாளர்
II. எழுதுனர்
III. வரி அறவீட்டாளர்.

*தகைமைகள்:-*

01) தமிழ், கணிதம் உட்பட க.பொ.த. சாதாரண தரத்தில் தேறியிருத்தல்வேண்டும்.
02) அகவை 18 -35 வரை இருத்தல் வேண்டும்.

**நேர்முகத்தேர்வு நடைபெறும்**

- நாள்:- 2004. 06. 09
- நேரம்:- காலை 10.00 மணி
- இடம்:- 27, ஆடியபாதம் வீதி, கொக்குவில்.

குறிப்பு:- நேர்முகத்தேர்வுக்கு ஆவணங்களுடன் வருகைதரல்வேண்டும்.

**ஆளுகை, சந்தைப் பகுதி, யாழ்.மாவட்டம்.**

(752)



கிளிநொச்சி அன்புச்சோலை மூதாளர் பேணலகத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட தங்ககத் திறப்புவிழாவில், பொதுச்சுடரை பொன் தியாகம் ஏற்றிவைப்பதையும், தேசியத்தலைவர் வே.பிரபாகரன் மூதாளர்களுக்கு பரிசில்களை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# கன்னிவெடி அகற்றும் பயிற்சியளிக்க அமெரிக்கப் படைப்பிரிவு இலங்கை வரவுள்ளது

(கொழும்பு)

**இலங்கையின் துன்கம மற்றும் எம்பிலிப்பிட்டிய ஆகிய இடங்களிலுள்ள இராணுவப் பொறியியல் பிரிவு பாடசாலைகளிலுள்ள இராணுவத்தினருக்கு கண்ணிவெடி அகற்றும் பயிற்சி அளிப்பதற்கு அமெரிக்கப்படைப்பிரிவின் உயர்மட்டக்குழு இலங்கை வரவுள்ளதாக இலங்கைப் படைத்தலைமையகம் தெரிவித்துள்ளது.**

கண்ணிவெடிகளை அகற்றும் செயற்பாடுகளுக்கு உதவி புரியும் நாய்களும், இந்த நாய்களைக் கையாள்வது தொடர்பான பயிற்சிகளை வழங்கும் அதிகாரிகளுமே இலங்கைக்கு முதன்முதலாக வரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் கண்ணிவெடி அகற்றுதல் தொடர்பாக செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின் அடிப்படையிலேயே பயிற்சிகளை வழங்க இவர்கள் வரவுள்ளார்.

இராணுவத்தினருக்குக் கண்ணிவெடி அகற்றுதல் தொடர்பான பயிற்சிகளை வழங்க 2.2 மில்லியன் டொலர் உதவியினை அமெரிக்கா இராணுவத்தளபதி லெப். ஜெனரல் லயனல் பலகல்லவிடம் வழங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மூன்று மாதம் நடைபெறவுள்ள இந்தப் பயிற்சி வகுப்பு எதிர்வரும் 10 ஆம் திகதி ஆரம்பமாகும். இதில் இலங்கை இராணுவத்திலுள்ள ஒரு அதிகாரி உட்பட பத்து ஏனைய நிலை அதிகாரிகளும் கலந்துகொள்ளவுள்ளனர். இந்த நிகழ்வில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அதிகாரி, இலங்கைக்கான அமெரிக்க தூதரக அதிகாரி, அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதரக அதிகாரி மற்றும் யு.என்.டி.பி அதிகாரி எனப் பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.

வடபகுதியில் படையினர் தற்போது மிதிவெடி அகற்றும் பிரதேசங்களில் - இந்த அமெரிக்க அதிகாரிகளும், நாய்களும் இனிமேல் தமது பணிகளை ஆரம்பிப்பார்களெனவும், இதன் மூலம் உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துதல் என்ற அரசின் திட்டம் விரைவுபடுத்தப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - இலங்கையில் தங்கிருக்கும் காலப்பகுதியில் அமெரிக்க அதிகாரிகள் குழு கண்ணிவெடிகள் அகற்றப்படும் இடங்களான அச்சுவேலி, புத்தூர், அரியாலை, தனங்கிளப்பு மற்றும் மீசாலைப் பகுதிகளுக்கும் செல்லவுள்ளனர்.

அத்துடன் மாவட்ட ரீதியில் கண்ணிவெடி அகற்றும் பிரிவினரையும் மற்றும் அரசசார்பற்ற பிரதிநிதிகளையும் யாழ்ப்பாணத்தில் சந்திக்கவுள்ளனர். இதன்பின் அவர்கள் இலங்கையில் சமய மற்றும் பண்பாட்டு இடங்களான அனுராதபுரம், கண்டி ஆகிய பிரதேசங்களுக்கும் செல்லவுள்ளனர். அதன் பின்னர் கொழும்பில் இராணுவத்தளபதி மற்றும் யு.என்.டி.பி. பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தவுள்ளனர்.

கண்ணிவெடி அகற்றும் செயற்பாட்டில் கடந்த வருடம் ஓகஸ்ட் மாதத்தில் 40 அலுவலர்கள், 42 சிரேஷ்ட அதிகாரிகள், 35 மருத்துவர்கள் மற்றும் 280 கண்ணிவெடி அகற்றுவோர் பயிற்சியளிக்கப்பட்டனர். இதனை 600 ஆக இந்த வருடம் அதிகரிப்பதற்குப் படைத்தரப்பு எண்ணியுள்ளது.

இராணுவப் பொறியியல் பிரிவு மற்றும் மனித நேய கண்ணிவெடி அகற்றும் பிரிவு என்பன கடந்த 2001 ஆம் ஆண்டு மார்ச் மாதம் கண்ணிவெடி அகற்றத் தொடங்கி, இந்த வருடம் மே மாதம் 15 ஆம் திகதிவரை 18 957 443 சதுர மீற்றரில் கண்ணிவெடி அகற்றப்பட்டுள்ளது. இந்த நிலப்பகுதியிலிருந்து 93, 085 மிதி வெடிகள், 309 வாகன எதிர்ப்பு கண்ணிவெடி, 5763 வெடிக்காத பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

கண்ணிவெடி அகற்றுவது தொடர்பான திட்டத்திற்கு ஆறு நாய்களுக்கு உயர் பயிற்சிகளை வழங்கவுள்ளனர். இதற்காக 120,000 டொலர் செலவினை வொஷிங் ரனிலுள்ள இலங்கை அமைப்பு, சிறுவர் எதிர்ப்பு கண்ணிவெடி அமைப்பு உட்பட மேலும் பல நிறுவனங்கள் வழங்கியுள்ளன.

## இரண்டு லட்சம் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டன

(கொழும்பு)

வன்னியில் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் கடந்த 1999 ஆம் ஆண்டு முதல் இந்தஆண்டு மே மாதம் 20 ஆம் திகதி வரையும் 98 ஆயிரத்து 110 மிதிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் தமிழர் தாயகப் பகுதிகளை ஆக்கிரமித்துக் கொண்ட படையினர் புதைத்து விட்டுச் சென்ற வெடிபொருட்களையும், வெடிக்கும் நிலையிலுள்ள வெடிபொருட்களையும் அகற்றும் பணியில் மனித நேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் ஈடுபட்டுள்ளனர்.

இதுவரை 98 ஆயிரத்து 110 மிதிவெடிகளையும் 104 வாகன வெடி பொருட்களையும் 86 ஆயிரத்து 91 வெடிக்கும் நிலையில் உள்ள வெடிபொருட்களையும் 1999 ஆம் ஆண்டுமுதல் 2004 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆம் திகதி வரையும் மீட்டுள்ளதாக மனித நேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வாராந்த ஆன்மீக சொற்பொழிவு

(யாழப்பாணம்)

வல்லிபுரக் கோவிலில் நடைபெறும் வாராந்த ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை 'சூடிக்கொடுத்த சுடர்க்கொடி' எனும் பொருளில் அதிபர் க.க.யோகநாதன் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றவுள்ளார். (128)

# ஜனாதிபதி - தொண்டமான் பேச்சு தோல்வியில் முடிவடைந்துள்ளதாம்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்துடன் இணைந்து கொள்வது தொடர்பாக - ஜனாதிபதிக்கும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகன் தொண்டமானுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தை தோல்வியடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிவில் விமான சேவை, வீடமைப்பு மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு உள்ளிட்ட முக்கிய அமைச்சுப் பொறுப்புக்கள் தமக்கு வழங்கப்பட வேண்டுமென இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் முன்வைத்த கோரிக்கைகளை ஜனாதிபதி ஏற்க மறுத்துள்ளதை அடுத்தே, இருதரப்புக்கும் இடையிலான பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்துள்ளதாக உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்படக்கூடாது, தற்போது நடைமுறையிலுள்ள விகிதாசார தேர்தல் முறைமை மாற்றப்படக்கூடாது மற்றும் கொத்மலை நீர் மின்சக்தி திட்டம் கைவிடப்படவேண்டும் போன்ற கோரிக்கைகளை ஜனாதிபதியுடனான பேச்சுவார்த்தையின் போது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் முன்வைத்துள்ளது.

ஆனால், இத்தகைய கோரிக்கைகளை ஏற்றுக் கொள்வது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கொள்கைகளைப் பாதிக்கும் ஒரு செயலாகவே அமையுமென ஜனாதிபதி கூறியதாக உள்ளகத் தகவல்கள் தெரிவித்தன.

இந்தநிலையில், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸை தமது பக்கம் இழுக்கும் முயற்சிகளில் முன்னின்று செயற்பட்டதாகத் தெரிவிக்கப்படும் அமைச்சர் மங்கள சமரவீர தற்போது இந்த முயற்சிகளில் இருந்து ஒதுங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# பன்னாட்டு பிளட்டூன் ஒத்திகையில் வெளிநாட்டு அவதானிப்பாளர்கள்!

குகுலே கங்கவில் எதிர்வரும் 12 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டு பிளட்டூன் ஒத்திகை ஆரம்ப நிகழ்வில் பல்வேறு வெளிநாட்டு அவதானிப்பளர்களும் கலந்து கொள்ளவுள்ளதாக இராணுவப் பயிற்சி இயக்குநர் பிரிகேடியர் சிறிநாத் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இராணுவத் தலைமையகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில உரையாற்றிய பிரிகேடியர் சிறிநாத் ராஜபக்ஷ மேலும் தெரிவித்ததாவது -

சாமகாமன என்ற பெயரில் நடத்தப்படவுள்ள இந்த ஒத்திகைப் பயிற்சி நிகழ்வின் ஆரம்ப வைபவத்தில் அவுஸ்ரேலியா, பூட்டான், கனடா, சீனா, பிரான்ஸ், இந்தியா, ஜப்பான், கொரியா, மலேசியா, மொங்கோலியா, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், ரஷ்யா. சிங்கப்பூர். தாய்லாந்து, பிரிட்டன் ஆகிய நாடுகளின் அவதானிகள் கலநதுகொள்ளவுள்ளனர்.

இந்த ஒத்திகை நிகழ்வில், ஆரம்ப நிகழ்வுக்கு அமெரிக்க இராணுவத்தின், பசுபிக் கட்டளைத் தளபதியான லெப்.ஜெனரல் ஜேம்ஸ எல். கம்பெல் தலைமைதாங்கவுள்ளார்.

இந்த நிகழ்வில், அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகளின் தூதுவர்களும், முப்படைகளின் தளபதிகள் உள்ளிட்ட பல்வேறு அதிகாரிகளும், பிரமுகர்களும் கலந்துகொள்ளவுள்ளவிருப்பது குறிப்பிடத்தக்கது.

# மன்னார் நானாட்டானில் வசித்த 12 குடும்பங்கள் யாழ். வந்தன!

(மன்னார்)

மன்னார் நானாட்டான் பிரதேச செயலர் பிரிவிலிருந்து முதற் கட்டமாக சுமார் 12 குடும்பங்கள் அந்தப் பகுதி பிரதேச செயலகர் ஊடாக நேற்று யாழ்.செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

யாழ்.குடாநாட்டில் ஏற்பட்ட யுதத அனர்த்தங்கள் காரணமாக 1990 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இடம்பெயர்ந்து மன்னார் நானாட்டன் பகுதியிலுள்ள இலந்த மோட்டை என்னும் இடத்தில் வசித்துவந்த சுமார் 30 குடும்பங்களில் 12 குடும்பங்களைச் சேர்ந்த 53 பேர் நானாட்டன் பிரதேச செயலர் ஊடாக யாழ்.செயலகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

தற்போது மீளக்குடியமரும் மக்களின் சொந்த இடங்களில் வீடுகள் அழிவடைந்த நிலையில் காணப்படுகின்றன. இவற்றை விட இந்த மக்களின் வீடுகள் உள்ள பகுதிகளில் கடற்படையினர் நிலைகொண்டுள்ளனர்.

இதனால், இவர்கள் தமது சொந்த இடங்களில் குடியமர மீளக்குடியமர முடியுமா. முடியாது என்பது தொடர்பான யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையிலான குழுவொன்று அங்கு சென்று பார்வையிடவுள்ளது. இவ்வாறு பார்வையிட்டபின்னர், மக்கள் தமது சொநத இடங்களில் மீளக் குடியமர முடியாமையின் அவர்களுக்குத் தற்காலிகமாக இருப்பிடவசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்வதற்கு ஆறு மாத காலத்துக்கு முன்பே விருப்பம் தெரிவித்தாகவும், தாம் தற்காலிகமாக வசித்த பகுதிகளில் தற்போது முஸ்லிம் மக்கள் மீளக் குடியமர்ந்து வருவதாகவும் நானாட்டானிலிருந்து வந்த மக்கள் தெரிவித்தனர். (தீ)

# புலிகள் பேச முன்வந்தது தனக்கே அதிக மகிழ்ச்சியாம்

## ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

நாட்டைப்பிரிவினைக்கு இட்டுச் செல்லும் எந்வொரு சக்திகளையும் தோற்கடித்து, நியாயமான சமாதானத்தைப் பெற்றுக்கொடுப்பதே தனது நோக்கம் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

அம்பாறை தீகவாடிக்கு விஜயம் செய்த ஜனாதிபதி சந்திரிகா முன்னாள் அமைச்சர் எம்.எச்.எம் அஷரப் நினைவு மண்டபம் ஒன்றைத் திறந்து வைத்து உரையாற்றினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் -

பிரிவினையைக் கோரி ஆயுதம் ஏந்திய விடுதலைப் புலிகள் அதிலிருந்து விலகி சமாதானப் பேச்சுக்களில் ஈடுபட விருப்பம் தெரிவித்திருப்பது ஏனையோரைவிட தனக்கே அதிக மகிழ்ச்சி ஏற்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

எனவே, அவர்களுடன் பேச்சு நடத்தி நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணப்படும் எனவும் தெரிவித்தார். (01)

# மேற்கிந்திய தீவுகளுடன் 2 ஆவது டெஸ்ட் பங்களாதேஷ் 9 விக்கெட் இழப்பிற்கு 264

மேற்கிந்தியத்தீவுகள் - பங்களாதேஷ் அணிகளுக்கிடையில் ஜமேக்காவில் நடைபெறும் இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்டத்தில் பங்களாதேஷ் 9 விக்கெட்டுக்களை இழந்து 264 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

முன்னதாக நாணயச்சுழற்சியில் வென்ற பங்களாதேஷ், முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் ஆட்டத்தை தொடங்கிய அந்த அணிக்கு ஆரம்பமே நன்றாக அமையவில்லை. இதன் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் ஹனான் சர்கார் முதல் பந்திலேயே ஓட்டமெதுவும் பெறாமல் ஆட்டமிழந்தார்.

இதன்பின் வந்த வீரர்களும் சிறப்பாக விளையாடவில்லை. இந்த நிலையில் மதிய உணவு இடைவேளையில் பங்களாதேஷ் அணி 3 விக்கெட்டுக்களை இழந்து 75 ஓட்டங்களைப் பெற்றது.

மதிய இடை வேளையின் பின்னர் அந்த அணியின் விக்கெட்டுக்கள் மேற்கிந்திய வீரர்களின் பந்துவீச்சினால் சரிக்கப் பட்டன. இறுதியில் முதல்நாள் ஆட்டநேர முடிவில் அந்த அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 264 ஓட்டங்களைப் பெற்றது.

அந்த அணி சார்பாக ராஜின் சாலே 47, காலித் மசூத் 39, ராபாஷ் பாயிசா ஆட்டமிழக்காமல் 34, ர.:.மான் 22, ஜாவிட் ஓமர் மற்றும் ஹபிபுல் பஷார் இருவரும் தலா 20 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் பாங்ஸ் 4, கொலின்ஸ் மற்றும் எட்வேட்ஸ் இருவரும் தலா 2, பெஸ்ற் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பங்களாதேஷ் அணியுடன் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இரண்டாவது டெஸ்ட்டை மேற்கிந்தியத் தீவுகள் அணி வெல்ல முடியாதெனில் அந்த அணியின் தலைமைப் பதவியிலிருந்து விலகவுள்ளதாக அணித் தலைவர் லாரா தெரிவித்ததும் குறிப்பிடத்தக்கது.



## அவுஸ்ரேலிய பயணத்தில் முரளியும் இடம்பெறுகிறார்!



(கொழும்பு)

இலங்கை அணி அடுத்த மாதம் அவுஸ்ரேலியாவில் சுற்றுப்பயணம் செய்து 2 டெஸ்ட்டில் விளையாடவுள்ளது. அவுஸ்ரேலிய பயணத்தைப் புறக்கணிப்பேன் என்று இலங்கை அணியின் முதல்தர சுழற்பந்து வீச்சாளரும், டெஸ்ட்டில் அதிக விக்கெட்டுக்களைக் கைப்பற்றியவருமான முரளிதரன் அறிவித்திருந்தார்.

அவுஸ்ரேலிய பிரதமர், முரளிதரன் பந்தை எறிகின்றார் என்று நேரடியாக குற்றஞ்சாட்டினார். பிரதமரின் இந்தக் குற்றச்சாட்டின் காரணமாகவே அவுஸ்ரேலிய பயணத்தை புறக்கணிப்பதாகத் தெரிவித்தார். தனது முடிவை முரளி மறு பரிசீலனை செய்து அவுஸ்ரேலியா வரவேண்டும் என்று ரிக்கிபொன்டிங் வேண்டு கோள் விடுத்தார்.

இந்த நிலையில் அவுஸ்ரேலிய தொடருக்கான இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் முரளிதரனும் இடம்பெற்றுள்ளார். இதனால் அவர் அவுஸ்ரேலியா செல்வது உறுதியாகிவிட்டது.

## பல்கலைகழகத்தில் ஓட்டப்போட்டி

கலைவார தடகள விளையாட்டுப் போட்டியின் முன்னோடி நிகழ்வாக - 10 ஆயிரம் மீற்றர் ஓட்டம் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நாளை காலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளது.

## பாடசாலை மெய்வன்மைப் போட்டிகள் நடைபெறும் திகதிகளில் மாற்றம்!

யாழ்.மாவட்டக் கல்வி வலயங்களுக்கு உட்பட்ட யாழ்.வலயப் பாடசாலைகளின் மெய்வன்மைப் போட்டிகள் கடந்த வெள்ளிக்கிழமை முதல் யாழ்.துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெற்று வருகின்றது.

இந்தப் போட்டி தொடரில் இன்று நடாத்தத் திட்டமிட்டு இருந்த போட்டிகள் யாவும் - மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு இன்று நடைபெறமாட்டாது எனவும், இதே போட்டிகள் நாளை திங்கட்கிழமை நடைபெறும் எனவும் யாழ். வலய உடற்கல்விப் பணிப்பாளர் த.அருணகிரிராஜா அறிவித்தார்.

இதேவேளை, யாழ்.மாவட்ட கல்வி வலயங்களான - தீவகம், வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், யாழ்ப்பாணம் ஆகிய கல்வி வலயங்களின் மெய்வன்மைப் போட்டிகளில் தெரிவு செய்யப்பட்ட விளையாட்டு வீரர்களுக்கிடையிலான யாழ். மாவட்டப் பாடசாலைகள் மெய்வன்மைப் போட்டிகள் எதிர் வரும் 11 ஆம், 12 ஆம், 14 ஆம் திகதிகளில் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளன.

யாழ். மாவட்டப் பாடசாலைகள் மெய்வன்மைப் போட்டிகள் ஏற்கனவே திட்டமிட்டபடி 10 ஆம் திகதிக்குப் பதிலாக 11 ஆம் திகதியே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டுச் செயலாளர் அறிவித்துள்ளார். (58)

## இன்றைய தினம் நடைபெறும் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டு அவை - அழைக்கப்பட்ட விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்திவரும் 20 ஓவர் கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று காலை 8.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகம் மோதும் போட்டியும்,

1.30 மணிக்கு யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழக அணி மோதும் போட்டியும் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டித் தொடரின் இறுதிப் போட்டி எதிர்வரும் 13 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

(58)

## ஆசிய கிண்ண போட்டியிலிருந்து நீக்கப்பட்டதற்கு அக்தர் விமர்சனம்



ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டிக்கான பாகிஸ்தான் அணியில் இருந்து தன்னை நீக்கியது கடுமையான முடிவாகும் என்று சொகைப் அக்தர் கூறியுள்ளார்.

ராவல்பிண்டி எக்ஸ்பிரஸ் என்று வர்ணிக்கப்படுபவர் அக்தர். பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான அவர் சர்ச்சையில் அடிக்கடி சிக்கிக்கொள்வது உண்டு.

ஆணவம் பிடித்தவர், அடங்காத குதிரை என்று கூறப்படும் அக்தர் சமீபத்தில் நடந்த இந்தியாவுக்கு எதிரான கடைசி டெஸ்டில் காயம் காரணமாகப் பாதி ஆட்டத்தில் விலகியதால் சர்ச்சைக்கு உள்ளானார். இதைத் தொடர்ந்து அவர் மருத்து வக்குழு விசாரணைக்கு ஆளானார்.

இந்த நிலையில் இலங்கையில் ஜுலை 16 ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 2 ஆம் திகதி வரை நடைபெறும் ஆசியக் கிண்ண போட்டியில் பாகிஸ்தான் அணியில் அக்தர் சேர்க்கப்படமாட்டார் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தேர்வுக்குழுத் தலைவர் வாசிம்பாரி நேற்று முன்தினம் அறிவித்தார். பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் முடிவு குறித்து சொகைப் அக்தர் நேற்றுக் கருத்துத் தெரிவித்துள்ளார். அவர் கூறியிருப்பதாவது -

ஆசிய கிண்ணப் போட்டிக்கான பாகிஸ்தான் அணியிலிருந்து என்னை நீக்கியது கடுமையான முடிவாகும். எனது உடல் தகுதி குறித்து சபை விசாரணை எதுவும் நடத்தவில்லை.

போட்டிக்கு இன்னும் 6 வாரங்கள் இருப்பதால் அதற்குள் நான் நிச்சயம் உடல் தகுதி பெற்றுவிடுவேன். உடல் தகுதி காரணமாக நான் அணியில் சேர்க்கப்படவில்லை என்று கூறப்படுவதை நம்பவில்லை எனத்தெரிவித்தார்.

## 2006 ஆசிய விளையாட்டில் மேலும் 5 போட்டிகள் இணைப்பு

2006 ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் ஆசிய விளையாட்டுப் போட்டியில் - பேஸ்போல், மென்பந்து, படகுப் போட்டிகள், உடற்பயிற்சி போன்ற போட்டிகள் சேர்க்கப்பட அதிகமான வாய்ப்புக்கள் உள்ளதாகப் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

2006 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஆசிய விளையாட்டுப் போட்டிகள் டுபாயில் நடைபெறவுள்ளன. இந்த 15 ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டிக்கான அடையாளச் சின்னம் (லோகோ) நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது. இந்த நிகழ்ச்சிக்குப் பின்னர் இந்தப் போட்டி அமைப்புக்குழுவின் சர்வதேச தொடர்புகளுக்கான இயக்குநரான அப்துல்லாயூசப் அல்முல்லா கூறுகையில் -

2006 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஆசிய விளையாட்டுப் போட்டியில் 33 போட்டிகளைச் சேர்க்க ஆலோசனை நடத்தி வருகிறோம். இந்த 5 போட்டிகளும் ஆசிய ஒலிம்பிக் சபையின் ஒப்புதலுக்குப் பின்னர் சேர்க்கப்படும் என்று கூறினார்.


ஆசிய ஒலிம்பிக் சபையின் பொதுக் குழு வரும் ஜுலை மாதம் 2 ஆம் திகதி டோஹாவில் கூடுகிறது. இந்தக் கூட்டத்தின் போது அந்த 5 போட்டிகளுக்கும் ஒப்புதல் அளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் மூலம் டுபாயில் நடைபெறவுள்ள ஆசிய விளையாட்டுப் போட்டியில் 38 விளையாட்டுகள் இடம்பெறும் என்று முல்லா தெரிவித்தார்.

ஜப்பானைச் சேர்ந்த விளம்பர முகவர்களின் வலியுறுத்தலால் பேஸ்போல், மென்பந்து ஆகிய இரண்டு விளையாட்டுக்களையும் சேர்க்க கடினமாக உழைத்துவருவதாக ஆசிய ஒலிம்பிக் சபையின் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

# விளையாட்டு

## பிரெஞ் ஓபன் ரெனிஸ்

# இரு ஆர்ஜென்ரீன வீரர்கள் இறுதிப்போட்டியில் மோதல்




(லண்டன்)

பிரெஞ் ஓபன் ரெனிஸ் போட்டியின் இறுதியாட்டத்திற்கு ஆர்ஜென்ரீன வீரர் கேஸ்டன் காடியோ, குல்லெர்மோ கோரியா ஆகியோர் தகுதிபெற்றனர்.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான பிரெஞ் ஓபன் ரெனிஸ் போட்டி பாரிஸ் நகரில் நடைபெற்று வருகிறது.

இதில் ஆண்கள் ஒற்றையர் அரை இறுதியாட்டம் ஒன்றில் ஆர்ஜென்ரீன வீரர் கேஸ்டன் காடியோ சக நாட்டைச் சேர்ந்த டேவிட் நல்பாண்டியனை எதிர்கொண்டார்.

பரபரப்பாக நடந்த ஆட்டத்தில் கேஸ்டன் காடியோ 6:3, 7:6 (7:5), 6:0 என்ற நேர் செட் கணக்கில் நல்பாண்டியனை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

மற்றொரு அரை இறுதியில் ஆர்ஜென்ரீனாவின் குல்லெர்மோ கோரியா, இங்கிலாந்து வீரர் டிம் ஹென்மனுடன் மோதினார்.

இதில் குல்லெர்மோ கோரியா 3:6, 6:4, 6:0, 7:5 என்ற செட் கணக்கில் டிம் ஹென்மனை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.




இன்று நடைபெறும் ஆண்கள் ஒற்றையர் இறுதிப் போட்டியில் ஆர்ஜென்ரீனாவைச் சேர்ந்த கேஸ்டன் காடியோ - குல்லெர்மோ கோரியா மோதுகிறார்கள்.

## இன்றைய ஆட்டம்

(யாழ்ப்பாணம்)

'தூய ஒளி' சுற்றுக் கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் குருநகர், பாடுமீன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று பிற்பகல் 4.00 மணிக்கு இளவாலை யங்ஹென்றீஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து அராலி ஜேம்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதும்.

(206)

## தடகள விளையாட்டுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

கலைவார தடகள விளையாட்டுப் போட்டி நாளை மறுநாள் செவ்வாய்க் கிழமை பி.ப. 1.30 மணி முதல் பி.ப. 4.30 மணி வரையிலும்,

புதன்கிழமை மு.ப. 9.30 மணிமுதல் 6 மணி வரையிலும் யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வின் பிரதம விருந்தினராக கலைபீடாதிபதி பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயரும், சிறப்பு விருந்தினராக தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸும் கலந்து சிறப்பிப்பார்கள்.

## பாடசாலை மாணவர்களின்
# தேசிய அடையாள அட்டைகள் செயலகத்திற்கு வந்துள்ளன

பாடசாலை மாணவர்களுக்கான தேசிய அடையாள அட்டைகள் கிடைக்கப்பெற்றிருப்பதால், அவற்றை வந்து பெற்றுக்கொள்ளுமாறு யாழ். செயலகத்தில் இயங்கும் ஆட்பதிவுத் திணைக்கள அதிகாரி திருமதி நடராஜா தெரிவித்துள்ளார்.

கீழ்க் குறிப்பிட்டுள்ள பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்குரிய தேசிய அடையாள அட்டைகள் கிடைக்கப்பெற்றிருப்பதால் அவற்றை அந்தந்தப் பாடசாலைகளின் அதிபர்களோ அல்லது பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்துடன் வரும் ஆசிரியரோ நேரில் வந்துபெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நாவாந்துறை றோமன் கத்தோலிக்கப் பாடசாலை, நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம், கொக்குவில் இராமகிருஸ்ண வித்தியாலயம், புனித சம்பத்திரிசியார் கல்லூரி, சுண்டிக்குழி மகளிர் கல்லூரி, கொட்டடி நமசிவாய வித்தியாலயம், பாசையூர் சென். அன்ரனீஸ் வித்தியாலயம்,

திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலயம், பெரியபுலம் மகா வித்தியாலயம், சென். ஜேம்ஸ் மகா வித்தியாலயம், கொழும்புத்துறை சென். ஜோசப் வித்தியாலயம், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலை, தேவரையாளி இந்துக்கல்லூரி, கட்டைவேலி யார்க்கரு விநாயகர் வித்தியாலயம், சிதம்பராக் கல்லூரி,

வல்வெட்டித்துறை இந்து தமிழ் கலவன் பாடசாலை, கரவெட்டி விக்னேஸ்வரா, ஸ்ரீநாரதர் வித்தியாலயம், கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி, சரவணபவானந்த வித்தியாலயம், ஊரெழு கணேசா வித்தியாலயம், அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம், உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம், ஆவரங்கால் மகாஜனா, கோப்பாய் மகா வித்தியாலயம்,

சேர் வைத்தியலிங்கம் துரைசாமி வித்தியாலயம், நாரந்தனை கணேசா வித்தியாலயம், வேலணை மேற்கு நடராசா வித்தியாலயம், மண்டைதீவு மகா வித்தியாலயம், ஸ்ரீ புஸ்ப மகளிர் கல்லூரி, சுழிபுரம் விக்டோரியா கல்லூரி, அராலி இந்துக்கல்லூரி,

யாழ்ப்பாணக் கல்லூரி, நவாலி மகா வித்தியாலயம், ஏழாலை மகா வித்தியாலயம், மல்லாகம் மகா வித்தியாலயம், இணுவில் மத்திய கல்லூரி, இணுவில் இந்துக் கல்லூரி, தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி, அருணோதயாக் கல்லூரி, யூனியன் கல்லூரி, மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம், வேம்பொடுகேணி சி.சி.த.க. பாடசாலை, பளை மத்திய கல்லூரி, இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை, அல்லாரை அ.த.க. பாடசாலை, சந்திரமௌலீச வித்தியாலயம், மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயம், நாவற்குழி மகா வித்தியாலயம், மட்டுவில் தெற்கு அ.மி.த.க. பாடசாலை, மிருசுவில் அ.த.க. பாடசாலை.

மேற்குறிப்பிட்ட பாடசாலைகளுக்குரிய சில அடையாள அட்டைகள் நீண்டகாலமாக யாழ். செயலக ஆட்பதிவுத் திணைக்களத்தில் வந்து தேங்கிக் கிடப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ப)

# தொழிலாளர் கல்விக் கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

ஐந்து வருடங்களுக்கு குறையாத வேலை அனுபவமும், ஆண்டு 9 (தரம் 8) கல்வித் தகைமையும் கொண்ட அரசாங்க, அரச கூட்டுத்தாபன, தனியார் நிறுவனங்களில் அல்லது சுயதொழிலில் (விவசாயம், மீன்பிடி மற்றும் குடிசைக் கைத்தொழில் உட்பட) ஈடுபட்டுள்ள தொழிலாளருக்கான "தொழிலாளர் கல்விச் சான்றிதழ்" கற்கை நெறிக்கு அனுமதி பெறுவதற்குரிய விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப் படிவத்தையும் மேலதிக விபரங்களையும் பல்கலைக்கழக எழுதுநர் அலுவலகத்தில் 20 ரூபா செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டினை நேரில் பரீட்சைகளும் அனுமதிகளும் கிளையில் சமர்ப்பித்து அல்லது பல்கலைக்கழக நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட 20 ரூபாவுக்கான காசுக்கட்டளை, தபாற் கட்டளையுடன் சுயவிலாசமிடப்பட்டதும், முத்திரை ஒட்டப்பட்டதுமான 23 செ.மீ x 10 செ.மீ. அளவிலான கடித மேலுறையுடன் "உதவிப் பதிவாளர், தேர்வுகளும் அனுமதிகளும் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி" என்ற முகவரிக்கு தபால் மூலம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் ஏற்பதற்கான கடைசித் திகதி 30.06.2004. தொழிலாளர் கல்விச் சான்றிதழ் பாடநெறியில் பங்குபற்றுவோர், எழுத்துத் தேர்வு மூலமாகத் தெரிவு செய்யப்படுவர்.

# விசேட தேவைக்குரியவர்களை முன்னேற்றுவது குறித்து கூட்டம்

## 8ஆம் திகதி செயலகத்தில்

விசேட தேவைக்குரியவர்களை முன்னேற்றுதல் தொடர்பாக யாழ். செயலகத்தில் கூட்டம் ஒன்று எதிர்வரும் 8ஆம் திகதி காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இதில் யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களின் சமூக சேவை உத்தியோகத்தர்கள், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள் உட்படப் பலரும் கலந்துகொள்வர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் விசேட தேவைக்குரியவர்கள் எனப்படும் அங்கவீனர்களுக்குப் பயிற்சி, தொழிற்பயிற்சி அளிப்பது, உதவித் தொகை வழங்குவது தொடர்பாகப் பல்வேறு விடயங்கள் ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப)

# வடமராட்சி கிழக்கு பகுதிக்கு மின்சாரம் வழங்குமாறு கோரிக்கை

(ஆழியவளை)

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்திற்கு மின்சாரம் வழங்குவதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அந்தப்பகுதி பொது ஸ்தாபனங்கள் கோரிக்கைவிடுத்துள்ளன.

சமாதானம் ஏற்பட்டு இரண்டரை வருடங்களுக்கு மேலாகிவிட்டது. குடாநாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு மின்சாரம் வழங்குப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால், வடமராட்சி கிழக்கின் எந்த ஒரு பகுதிக்கும் இதுவரை மின்சார வசதி செய்து கொடுக்கப்படவில்லை.

1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் வரணிப்பகுதியினூடாக குடத்தனை, அம்பன், மணற்காடு, நாகர்கோவில் ஆகிய பகுதிகளுக்கும், புதுக்காட்டுச் சந்தியிலிருந்து, மருதங்கேணி பகுதிக்கும், இயக்கச்சிப் பகுதியில் இருந்து வெற்றிலைக்கேணி கட்டைக்காடு, ஆழியவளை ஆகிய கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்குவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால், யுத்தம் காரணமாக இவ்வேலைகள் ஸ்தம்பிதம் அடைந்தன.

மேலும் உலக வங்கியின் நிதி உதவியினூடாக மின்சாரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்ற போதிலும், எவ்வித வேலைகளும் அந்தப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டதாகதெரியவில்லை. (122)

# பதினைந்து இலங்கை மீனவர்கள் கடலோர காவற்படையால் கைது

(யாழ்ப்பாணம்)

சர்வதேசக் கடல் எல்லையைத் தாண்டி நாகப்பட்டினம் கடற்பகுதியில் மீன்பிடித்தாகக் குற்றஞ்சாட்டி 15 இலங்கை மீனவர்களை இந்தியக் கடலோரக் காவற்படையினர் கைது செய்துள்ளனர்.

வழக்கமான ரோந்துப்பணியில் மண்டபத்தைச் சேர்ந்த கடலோரக் காவற்படையினர் ஈடுபட்டிருந்த போது, நாகபட்டினம் கடற்பகுதியில் 15 இலங்கை மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தமை தெரியவந்ததாகவும் இதையடுத்து, அவர்களை கடலோரக் காவற்படையினர் வளைத்துப் பிடித்ததாகவும் தமிழகத் தகவல்கள் தெரிவித்தன.

பின்னர் அவர்களை மண்டபம் கடலோரக் காவற்படை முகாமுக்கு கொண்டுசென்று விசாரணை நடத்தினர். பின்னர் அவர்கள் பொலிஸார் வசம் ஒப்படைக்கப்படுவர் எனத் தெரிகிறது.

இதேவேளை இந்தியக் கடற்பரப்பில் வைத்து இந்தியக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட மீனவர்களை இலங்கை கடற்படையினரிடம் ஒப்படைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.

கடந்த புதன்கிழமை காலை மீன்பிடியில் ஈடுபட்டிருந்த 3 மீன்பிடிப் படகுகள் இந்தியக் கடற்பகுதிக்குள் இழுத்துச் செல்லப்பட்டே இந்தியக் கடற்படையினரால் இலங்கை மீனவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்களை விடுதலை செய்யுமாறு இந்தியத் தூதரூடாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ விடுத்த வேண்டுகோளை அடுத்தே இவர்கள் விடுதலை செய்யப்படவுள்ளனர்.

இலங்கை மீனவர்கள் தமிழ்நாடு மண்டபம் முகாமில் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்கள் பெரும்பாலும் இன்று இலங்கை கடற்படையினரிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக பிரதமர் அலுவலம் தெரிவித்தது.

## பச்சிலைப் பள்ளியில் சிரமதானம்

தமிழீழ மாணவர் எழுச்சி நாளையும் உலக சுற்றுச்சூழல் தினத்தையும் முன்னிட்டு பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் சிரமதானங்களும் மரக்கன்று நடுகைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நேற்றுமுன்தினம் பச்சிலைப் பள்ளி பிரதேச சபையினரும் பளை மத்திய கல்லூரி மாணவர்களும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரும், பளை அரசினர் வைத்தியசாலைப் பகுதியிலும் பொது இடங்களிலும் சிரமதானங்களில் ஈடுபட்டனர். (122)

## விஜித ஹேரத்துடன் சந்திப்பு

"சலன சித்திரம்" மாவட்டத் திரைக் கலைச்சங்கங்களின் சம்மேளனத்திற்கும் கலாசார, தேசிய விழுமியங்கள் அமைச்சர் விஜித ஹேரத்திற்கும் இடையிலான சந்திப்பொன்று எதிர்வரும் 10ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

இந்த சந்திப்பில் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் நிர்வாக முறைமை மற்றும் எதிர்காலச் செயற்திட்டங்கள் பற்றிக் கலந்துரையாடி முடிவு எடுக்கப்படவுள்ளது.

# தேசிய டிப்ளோமா பட்டதாரிகளுக்கு இம்மாத இறுதியில் நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரிகளில் டிப்ளோமா பட்டம் பெற்று 2003 ஆம் ஆண்டில் வெளியேறிய ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்குவது தொடர்பாக - நேற்று முன்தினம் வட மாகாண தமிழ்த் தேசிய கல்வியியற் கல்லூரி டிப்ளோமா ஆசிரிய சங்க பிரதிநிதிகளுக்கும் வட கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆர். தியாகலிங்கத்துக்கும் இடையில் ஊர்காவற்றுறை சென்அன்ரனீஸ் பாடசாலையில் விசேட சந்திப்பு ஒன்று இடம் பெற்றது.

தற்போது அமைச்சுக்கு ஆசிரியர்களின் விபரம் கிடைக்கப்பெற்றிருப்பதாகவும், இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை இம்மாத இறுதிப் பகுதியில் இடம்பெறவுள்ளதாகவும், பெரும்பாலும் சொந்த மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்டும், தீவுப் பகுதிகளில் நிலவும் பாரிய ஆசிரியர் பற்றாக்குறையும் நிவர்த்தி செய்யப்படும் எனவும் செயலாளர், ஆசிரியர் சங்க பிரதிநிதிகளுக்கு உறுதியளித்தார்.

## சப்பற வெள்ளோட்டம்

காரைநகர் வாந்தலை மருதடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் சப்பற வெள்ளோட்டம் இன்று காலை 8 மணிக்கு இடம்பெறவுள்ளது.

புதிதாக வடிவமைக்கப்பட்ட சப்பறத்தில் எம்பெருமான் நாளை இரவு வீதி உலா வருவதுடன் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும் என வீரகத்தி விநாயகர் ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (91)

## மருதடி விநாயகர் ஆலய கும்பாபிஷேகம்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேகம் எதிர்வரும் ஜூன் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. கோவில் மூலஸ்த்தானம், அர்த்த மண்டபம், மகா மண்டபம் என்பன கருங்கல்லினால் அமைக்கப்படவுள்ளது. இதற்கான நிர்மாணப் பணிகளை தமிழ் நாடு மாமல்லபுரம் சிற்பாச்சாரி சே.ஞானமூர்த்தி ஸ்தபதி குழுவினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (101)

## அவசர சிகிச்சைப் பிரிவுக்கு நிதியொதுக்குமாறு கோரிக்கை

(உடுவில்)

தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலையில் அவசர தேவையாகவுள்ள அவசர சிகிச்சைப் பிரிவை அமைப்பதற்கு நியாப் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கித் தருமாறு வைத்தியசாலை நிர்வாகம் கோரிக்கை விடுத்துள்ளது. இதற்கமைவாக வீடமைப்புத் திணைக்கழத்தின் மூலம் மதிப்பீடு செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (101)

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்



### முதலாவது அகவையில்



பெயர் : இ.சங்கீத்
முகவரி : கரவெட்டி

### இரண்டாவது அகவையில்



பெயர் : ர. சுபாயினி
முகவரி : சோந்தம்பை, கம்பர்மலை

### ஆறாவது அகவையில்



பெயர் : ச.சக்திதாரணி
முகவரி : கற்பொக்கணை, உடுவில்.

### ஏழாவது அகவையில்



பெயர் : அ.துஷாந்தினி (கம்சா)
முகவரி : குருநகர், யாழ்ப்பாணம்.

### முதலாவது அகவையில்



பெயர் : ச.டிலக்சினி
முகவரி : கூவில், புலோலி தெற்கு

# உரத்துச் சொல்கின்றோம்

இன்று உலகின் அதிசிறந்த கிரிக்கெட் அணியாக அவுஸ்ரேலியா இருக்கலாம். அதற்காகக் கிரிக்கெட்டில், உருவாகும் எல்லா சர்ச்சைகளிலும் தலையிடவேண்டிய அவசியம் என்ன ஏற்பட்டுள்ளது?

கோட்னி வோல்ஷின் பந்து வீச்சுச் சாதனையை முரளிதரன் முறியடித்து உலகின் கூடிய விக்கெட்டுகள் சரித்த வீரன் என்று தன்னைத் தாபித்துக்கொண்ட பின் முன்னாள் அவுஸ்ரேலிய டெஸ்ட் கிரிக்கெட் வீரர்கள் போதும் போதும் என்றளவுக்கு முரளி பற்றிச் சொல்லி முடித்துவிட்டார்கள்.



முரளி "உள்ளம் நிறைய வெண்மை"

முரளிதரன் DOOSRA பந்து வீசியமை, அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட சர்ச்சைகள் ICC, DOOSRAவைத் தடை செய்தமை என்பதன் பின்னணியில் பாரிஜார்மன், பொப்சிம்ப்சன் கிரெக் சப்பல், இயன் ஹீலி, இன்னும் பலர் என்று முரளியை ஏதோ கிரிமினல் குற்றம் புரிந்தவர்போல வாங்கு வாங்கென்று வாங்கித்தள்ளி விட்டார்கள்.

நாங்கள் முன்னர் வினவியதுபோல இப்பொழுதும் கேட்பது என்னவென்றால், ஏனைய எட்டு டெஸ்ட் அந்தஸ்துப் பெற்ற நாடுகளும் அமைதியாக இருக்க அவுஸ்ரேலியா மட்டும் ஏன் வரிந்து கட்டிக் கொண்டு முரளி மீது சேற்றை வாரிப் பூசுகிறது. உண்மை மிகவும் தெளிவானது.

அதாவது, உலகின் அதிசிறந்த பந்து வீச்சுச் சாதனை புரிந்தவராக தமது நாட்டின் ஷேன்வோன் மட்டுமே இருக்க வேண்டும். முரளிதான் ஷேன்வோனைவிட இரண்டு வயது மூத்தவராக இருப்பதும், பந்து வீச்சு ஒப்பீட்டில் சராசரியாக ஒவ்வொரு டெஸ்ட் போட்டிக்கும் முரளிதான் ஏறத்தாழ ஆறுவிக்கெட்டும், அதே வேளை ஷேன்வோன் 4.70 என்றநிலையிலுமே இருக்கிறார்.

இந்த நிலையில் முரளியை விட்டால் ஷேன்வோனை யாராலும் எட்டவே முடியாமல் போய்விடும்.

ஆகவே, இப்படியாக முரளிக்குத் தலையடி போடுவதே ஷேன்வோனை சாதனை வீரனாக்கும் ஒரேவழி என்று எண்ணுகிறார்கள்.

இப்பொழுதே அவுஸ்ரேலியாவில் நடைபெற இருக்கும் இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் முரளி பங்குபற்றும் ஆர்வத்தை பெரிதும் குறைக்கும் முயற்சியில் இவர்கள் ஈடுபட்டுள்ளார்கள். அதே அவுஸ்ரேலிய ஊடகங்கள் முரளி பற்றி குறையாக எழுதித் தள்ளிக் கொண்டிருக்கின்றன. இது மட்டுமன்றி தொடர்ச்சியாக முரளியைப் பற்றி தவறாக எழுதி எழுதி கிரிகெட் ரசிகர்கள் மனதில் முரளியின் பந்து வீச்சுப் பற்றி பிழையான கருத்துக்களை நஞ்சாக ஏற்றி, எதிர்காலத்தில் முரளியின் சாதனை குறைபாடு உடையது என்று காட்டுவதும் முரளி எதிர்ப்புச் சக்திகளின் அதீத ஆசையாகும்.

அனில் கும்ளே கருத்துக் கூறும்போது -

முரளியின் பந்து வீச்சு முறைமை பற்றிய சர்ச்சை தற்போதைக்கு அநாவசியமானதும், துரதிஷ்டவசமானதென்றும் கூறியுள்ளார். முரளியே டெஸ்ட் உலகின் சிறந்த பந்துவீச்சாளர் என்றும் கூறுகிறார். அவர்மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்க வேண்டுமோ, அந்த நடவடிக்கை மிக நீண்ட காலத்தின் முன்பே எடுக்கப்பட்டிருக்க வேண்டும். முரளி கொத்துக் கொத்தாக விக்கெட்டுக்களைக் கொய்யும்போது, அவர் மீது சுட்டு விரலை நீட்டிக் கொண்டிருப்பதில் அர்த்தம் இல்லை என்கிறார் கும்ளே. குறைந்தது அவுஸ்ரேலியர்களைப்போல குறைகண்டு கொண்டிருக்காமல் முரளியின் திறமையை அங்கீகரிக்கும் சில நாகரிகமான கிரிகெட் வீரர்கள் இருப்பது ஆறுதலாக இருக்கிறது.

முரளியினுடைய மகத்தான ஆணைச் சர்ச்சைகள் நிரம்பிய கிரிக்கெட் வாழ்வில் அவுஸ்ரேலியர்களே கூடுதலாக அவரை வீழ்த்தி மிதிக்க முயற்சித்திருக்கிறார்கள். முதலில் அவர்களின் ஊடகங்கள், பின்னர் அவர்களின் நடுவர்கள், தொடர்ந்து கிரிக்கெட் வீரர்கள், தற்போது அவுஸ்ரேலியப் பிரதமர் இதெல்லாம் எங்கே போய் முடியப்போகிறது? இவர்கள் எல்லாம் முரளியை கிரிக்கெட் ஆட்டத்தில் இருந்து அப்புறப்படுத்த முயல்கிறார்களா?

நன்றி. டெய்லிமிரர்.




# மேதிறக் கைகள்

முன்னொரு காலத்திலே சர்வதேச கிரிக்கெட்டிலே எந்த அணியாலும் அசைக்கமுடியாத அணியாகத் திகழ்ந்த மேற்கிந்தியத் தீவுகள் அணியை ஆட்டம் காண வைத்துள்ளது பங்களாதேஷ் அணி.



வட்மோர் "நூறுவீத ஆசான்"

வலிமை குறைந்த பங்களாதேஷ் அணியை மேற்கிந்திய அணியினர் துவசம செய்வார்கள் என எதிர்பார்க்கப்பட்டபோதும், அது கூடாமற்போயிற்று.

ஒருநாள் போட்டிகளில் ஒருவாறு மாரடித்து வென்ற மேற்கிந்திய அணியினர் - எவ்வளவுதான் முயன்றும் முதலாவது டெஸ்ட்போட்டியில் வெற்றி பெறமுடியவில்லை.

இதுவரையில் 28 டெஸ்ட்போட்டிகளில் விளையாடியும் ஒரு போட்டியில்கூட வெற்றி பெறாத பங்களாதேஷ் அணி, கடந்த 29 ஆம் திகதி மேற்கிந்தியாவுக்குத் தான் மேற்கொண்ட கன்னிச் சுற்றுலாவிலேயே 416 ஓட்டங்களைக் குவித்து, தனது டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றிலே அதிகூடிய ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இவ்வளவு காலமும் கரையிலே நின்று தப்படித்த பங்களாதேஷ் அணி - திடீரென நடுக்கடலில் கடும் அலைகளை எதிர்த்து போராடுவதற்குப் பின்னால் ஒரு உண்மை மறைந்திருக்கின்றது.

பங்களாதேஷ் அணியின் இந்தத் திடீர் எழுச்சிக்குக் காரணமானவர் அநத அணியின் பயிற்சியாளர் டேவ் வட்மோர் என்பதில் எந்த மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை.

பங்களாதேஷ் அணி மேற்கிந்திய தீவுகளுக்குப் பிரயாணம் ஆகும் முன்னர் செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்த வட்மோர் டெஸ்ட் அந்தஸ்து பெற்றது முதல் இதுவரையில் ஒரு போட்டியிற்கூட வெற்றிபெறாத பங்களாதேஷ் அணி, வளர்ந்துவருவதை விளக்க இந்த டெஸ்ட் தொடர் நல்லவாய்ப்பாக இருக்கும் எனத் தெரிவித்தார்.

ஒரு சிறந்த பயிற்சியாளரால் எந்த அணியையும் புடம்போட்டு வளர்க்க முடியும் என்பது வட்மோரைப் பொறுத்தவரையில் உண்மையாகும். ஒளிவீசாத கற்களைப் பட்டம் தீட்டி ஒளி வீசச் செய்வதைப் போன்று பங்களாதேஷ் அணியினைப் பட்டம் தீட்டியுள்ளார் வட்மோர்.

வட்மோர் என்றும் அற்புதமான பயிற்சியாளன். உள்ளே அணிகளை நெறிப்படுத்தி, வலுப்படுத்தும் ஆற்றல் இருப்பதையே இது எடுத்துக்காட்டுகின்றது.

இங்கு 1996 ஆம் ஆண்டு இலங்கை அணி உலக கிண்ணத்தை வெல்வதற்குக் காரணமாக இருந்தவர் வட்மோர் என்பது நோக்கத்தக்கது.

1996 ஆம் ஆண்டில் வட்மோரின் நெறிப்படுத்தலிலே இலங்கை அணி வீறு கொண்டு எழுந்தது.

ஆனால், அதன்பின், இலங்கை அணிக்குப் பயிற்சியாளரான ஜோன் ரைட்ஸ் அந்தளவுக்குச் சாதிக்கவில்லை. டேவ் வட்மோரை இழந்தமை இலங்கை அணியைப் பொறுத்தவரையில், துர்ப்பாக்கியமானதே. அதே சமயம் தனது திறமையால் பங்களாதேஷ் அணியை வட்மோர் சாதிக்கவைப்பார் என்பதிலும் ஐயம் இல்லை.

- லெஸ்லி -

# மறுபக்கம் துயரம்



தைபு "வா! வா! ICC"

பலசாலிகள் தம் கருத்தை மெதுவாகச் சொன்னாலும், பலமாகத்தான் பதிவாகிறது போல இருக்கிறது. அநேகமாக இதுவரையில் வந்த ஊடகச் செய்திகள் எல்லாம் முகாபேயை மற்றும் சிம்பாப்வே கிரிக்கெட் சபையை கொடூரமானவர்களாகவும், எல்லாவற்றையும் போட்டு உடைப்பவர்களாகவும், ஹீத் ஸ்ரீக் மற்றும் அவர் சார்ந்தவர்கள் "ஐயோ பாவங்கள்" என்ற ஒரு தோற்றத்தையும் ஏற்படுத்தி இருந்தது.

ஆனால், கறுப்பு இன சிம்பாப்பேத் தலைவர் மற்றும், அந்த இனமக்களின் பாலான பார்வை என்றும் ஒன்று இருக்கிறதல்லாவா என்கிறார் ஒரு விமர்சகர். றொபட் முகாபே ஏறத்தாள கால் நூற்றாண்டு சுதந்திர வரலாறு கொண்ட சிம்பாப்வேயின், அந்த மக்களின் நேசம் பெற்றவராகவே இருக்கிறார்.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்புவரை அதாவது, வெள்ளை இனத்தவருக்கு நிலங்களை மீளளித்தபோது மேற்குலகிற்கு முகாபேமீது ஒரே விருப்பம். இதில் புள்ளி விபர ரீதியாக அவதானிக்க வேண்டிய விடயம் ஒன்றுண்டு.

1979 ஆம் ஆண்டில் பிரித்தானியாவிடம் இருந்து சிம்பாப்வே சுதந்திரம் பெற்ற காலத்திற்கூட வளம்கொழிக்கும் விவசாய நிலங்களில் தொண்ணூறு சதவீதமானவை 4000 பிரித்தானிய வெள்ளையினத்தவருக்கே சொந்தமாக இருந்தன. கறுப்பின மக்கள் இந்த நிலங்களில் கூலிவேலை செய்பவர்களாகத்தான் இருந்தார்கள். எனவே, இந்த நிலங்களை முகாபே கறுப்பின மக்களுக்கு, வெள்ளையரிடம் இருந்து பெற்றுக் கொடுத்த முறையில் தவறுகள் இருக்கலாம். ஆனால், மண்ணின் மைந்தர்களிடம் இருந்த பறிக்கப்பட்ட நிலங்கள் மீண்டும் அவர்களிடமே செல்ல முகாபே எடுத்த நடவடிக்கை பிழையானதென எப்படிக் கூறமுடியும்.

இதன் தொடர்பில் முகாபேயின் நடவடிக்கைகளுக்கு மறுத்தானாக பிரித்தானியரின் தூண்டலால் சிம்பாப்வே மீது சில பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டன.

2003 ஆம் ஆண்டு உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளின்போது பிரித்தானியாவும், அவுஸ்ரேலியாவும் - சிம்பாப்வே வரமாட்டோம் என்று புறக்கணிப்பு ராஜதந்திரத்தைப் பிரயோகித்து முகாபேயைச் சரணடைய வைக்க முயற்சித்தார்கள். ஆனால், அது அவர்களுக்குத் தோல்வியாகவே முடிந்தது.

அத்தோடு, அரசுகள் விளையாட்டுகளைப் பயன்படுத்தி அரசுகளைப் பணியவைக்க முயல்வது தோல்வியிலேயே முடியும். தென்னாபிரிக்காவில் இரு தசாப்த கிரிக்கெட் தடை இதற்கு நல்லதொரு உதாரணம். மேலும், குறித்த நாடுகளின் மக்கள் வாழ்க்கைத்தரமோ, பொருளாதார அபிவிருத்தியோ ஏற்படப்போவதும் இல்லை. ஆனால், உண்மையில் பாதிக்கப்படப்போவது, அந்த நாட்டின் மக்கள்தான். மேலும் விளையாட்டு என்கிற ஒரு சந்தோஷத்தையும், ஆறுதலையும் அவர்கள் இழந்து விடுகிறார்கள். வேறொன்றும் எஞ்சப்போவதில்லை. தடைகள், தடைகள் என்றாலும் இன்றும் பிரித்தானிய, அவுஸ்ரேலிய கம்பனிகள் இப்போதும் சிம்பாப்வேயில் இயங்கிக் கொண்டு தான் இருக்கின்றன.

இன்னொருபுறம் கொமன்வெல்த் அமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் நாடுகளில் எத்தனை நாடுகளில் சுத்தமான ஜனநாயகம் பேணப்படுகிறது என்று பார்த்தால் அங்கு பூஜ்யம் தான் மிஞ்சும்.

வேறொரு தரப்பில் கருத்துக் கூறும்போது, வெள்ளை இன கிரிக்கெட் வீரர்கள் சிம்பாப்வே அணியை விட்டு நீக்கப்படவில்லை. அவர்களாகவே வெளியேறினார்கள். அதற்குக் காரணம் - ஹீத் ஸ்ரீக். உண்மையில் ஹீத் ஸ்ரீக் தைபுவின் தலைமையின் கீழ் தான் விளையாட மறுத்திருந்தார். எனவே, ஹீத் ஸ்ரீக் தன் நிறத்தை யோசிக்காது நாட்டை யோசித்திருந்தால், தைபுவின் தலைமையின் கீழ் விளையாடியிருக்கலாம். தைபுவையும் இளம் வீரர்களையும் உற்சாகப்படுத்தியிருக்கலாம்.

எனவே, ஒரு பக்கச்சார்பான பிரசுரங்களால் கருத்தேற்றம் செய்யப்பட்டிருக்கும் கிரிக்கெட் ரசிகர்கள், இதிலுள்ள இன்னொரு பக்கத்தையும் புரிந்துகொள்ளவும் இது உதவும். இனி அடுத்தென்ன பிலிக்நொட், சோன்எர்வின் போன்றவர்கள் அவுஸ்ரேலியப் பிராந்தியங்களில் கிரிக்கெட் ஆடப்போவதாகத் தகவல். இனம் இனத்தை நாடிச்செல்கிறது. எனவே, சிம்பாப்வே தன் நாட்டின் தற்போதைய வீரர்களை நம்பி அணியை வளர்க்க முயற்சிப்பதா, அல்லது அவர்களுக்கு 'வெற்றிலை' வைத்துக்கொண்டு காலத்தைப் போக்குவதா? இரண்டில் ஒன்றைத் தான் தெரிவு செய்ய முடியும். தற்போதைய சிம்பாப்பே அணி ஏன் வளர்க்கப்பட முடியாது. இன்றைய நிலையை சவாலாக ஏற்றுக்கொண்டு வளரலாம். இதற்கு ICC சிம்பாப்பேக்கு சகல உதவிகளையும் செய்யலாமே.

-நிர்மலன்-

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

# விளையாட்டில் ஒரு வீரம் இருக்கு

சிம்பாப்வே நாட்டின் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் பிரச்சினைகள் எத்தனையோ. அவை போதாதென்று சிம்பாப்வே சென்று வந்த இலங்கை அணித்தலைவர் மாவன் அத்தப்பத்து தங்கள் பங்குக்கு, தாங்கள் சிம்பாப்பேயில் அனுபவித்த 'தாங்கொணாத் துயரங்கள்' பற்றிப் பேசி இலங்கையருடைய எரிச்சலையும், வெறுப்பையும் சம்பாதித்துக் கொண்டிருக்கின்றார்.

விஸ்டன் சஞ்சிகை நிருபருக்கு அளித்த பேட்டியில் - சிம்பாப்வே கிரிக்கெட் சபையின் திட்டமிடல் ஏற்பாடுகள் பற்றி வெளிப்படையாகவே குறை கூறியுள்ளார். இவரது பெருங்கவலை, தாங்கள் போனபோது தங்கள் ஹோட்டல் அறையின் குளிர்சாதன வசதிகள் செய்யப்பட்டிருக்கவில்லை. தண்ணீர் வசதிகள் சரியாகச் செய்து தரப்படவில்லை. பயிற்சி வசதிகள் (NETS) சரியாக ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கவில்லை என்று ரொம்ப வருத்தப்படுபவர், தனது கிரிக்கெட் வாழ்க்கையிலேயே இவ்வளவு மோசமான வசதிக்குறைகளையும், திட்டமிடல் குறைபாடுகளையும் தான் கண்டதே இல்லை என்று கருத்துத் தெரிவித்துள்ளார். இது தொடர்பில், வெளிநாட்டில் வாழும் இலங்கைப் பத்திரிகை எழுத்தாளர் ஒருவர் - அத்தப்பத்துவை வாங்கு வாங்கென்று வாங்கியிருக்கின்றார்.

ஒரு நாட்டின் உயர் பதவி எனும் பொறுப்புடன் இன்னுமொரு நாட்டுக்குச் சென்ற ஒருவர், இவ்வாறு கருத்துக் கூறுவது, அதுவும்




அத்தபத்து
"திரும்பிப் பாருங்க கண்ணீர் தெரியும்"

இப்படிப்பட்ட குறைபாடுகளைச் சுட்டிக்காட்ட முனைவது எவ்வளவு இரண்டாந்தரச் செயற்பாடு என கேட்கிறார் அவர். அதுவும் உலகின் முன்னணிக் கிரிக்கெட் சஞ்சிகைக்குப் பத்திரிகை எழுத்தாளரின் ஆதங்கம் சரியானதுதான்.

இந்த விடயத்தின் தொடர்ச்சியாக ICC இலங்கைக்கான சிம்பாப்வே பயணத்தை நிறுத்தியிருக்க வேண்டும் என்பதும், இலங்கை அணித்தலைவரின் கருத்து. இந்த விடயத்தில் கருத்துக்கூறும் பத்திரிகை எழுத்தாளர், ஏற்கனவே சிம்பாப்வே சுற்றுப்பயணத்தை நிறுத்துவது நலமென்று கருத்துக்கள் முன்வைக்கப்பட்டதையும் சுட்டிக்காட்டுவது குறிப்பிடத்தக்கது. எனவே, சிம்பாப்வேயில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டிகளின் முடிவுகளை, புள்ளிவிபரங்களை, ஏன் முரளியின் சாதனையை, பணப்பரிசில்களை விட்டுக்கொடுக்க இவர் தயாரா என்று கேள்விகள் எழும்புகின்றன. அத்தப்பத்துவின் குரூரமான, மிதப்பான, 'உயர்வர்க்க' சிந்தனை அதுவும், சிம்பாப்பே கிரிக்கெட் சபையின் ஏதும் குறைகள் இருந்தால், மன்னித்துக்கொள்ளுங்கள் என்ற குரலின் பின்பும், எல்லோர் மத்தியிலும் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

உண்மையில் டெஸ்ட் அணியின் தலைவராக முதன் முதலாக கடமையேற்று சிம்பாப்வே செல்வதை அத்தப்பத்து விரும்பியே இருந்தார். அப்பொழுதே சிம்பாப்வே கிரிக்கெட் அணியின் சங்கடங்கள் தெரிந்தே இருந்தன. இவரது இரண்டாந்தரக் கருத்துக்கள் பற்றி குறிப்பிடுகையில் - சிம்பாப்வே கிரிக்கெட் சபையின் தலைவர் பீற்றர் சிங்கொகா 'இந்த விடயம் தற்போதைய நிலையில் அதி முக்கியத்துவம் கொடுக்கப்படக் கூடியதானதல்ல' என்று நாகரிகமாகத் தெரிவித்திருக்கின்றார்.

மேலும் இலங்கைக்கு முன்னதாக மேற்கிந்தியத் தீவுகள் அணியினர், பங்களாதேஷ், அவுஸ்ரேலியா ஆகிய நாடுகள் சிம்பாப்வே வந்து சென்றன. இப்படியான சில்லறை விடயங்கள் பற்றி அவர்கள் பேசவேயில்லை என்று குறிப்பிட்டுள்ளார் அவர். பத்திரிகை எழுத்தாளர் தனது கருத்தான ஒரு வேண்டுகோளை அத்தப்பத்துவுக்கு தெரிவிக்கிறார். உங்களுக்குக் கிடைத்திருக்கின்ற ராஜபோக வாழ்க்கைக்கு அப்பால் சிறிது வாருங்கள். உங்களைச் சூழவுள்ள வறுமையைப் பாருங்கள் என்று தொடர்கிறார் அவர், அப்படிக் கண்திறந்து பார்த்தால் சிம்பாப்வே போன்ற நாட்டின் வறுமை, துன்பம் போன்றவை புரியும்.

அத்தோடு ஏன் சிம்பாப்வேயினரால் இவர் எதிர்பார்த்த நீர்வளத்தையும், குளிர்சாதன வளத்தையும் கொடுக்க இயலவில்லை என்பது புரியும் என்று முடிக்கின்றார்.

அதற்கு முன்னதாக நாங்கள் இலங்கை கிரிக்கெட் அணித்தலைவரைப் பார்த்து இதே கேள்வியைக் கேட்கலாம். இரண்டு கோடி மக்கள் தொகை கொண்ட உமது நாட்டில் எத்தனை வீடுகள் குளிர்சாதனம் பொருத்தப்பட்டிருக்கின்றது, எத்தனை வீதமான மக்கள் நல்ல நீரைப் பெறுகிறார்கள், எத்தனை வீதமான மக்கள் FIVE STAR வாழ்க்கையை வாழ்கிறார்கள், எத்தனை குடும்பங்கள் பல மில்லியன் ரூபா பெறுமதியான சொகுசு வாகனங்களுக்குச் சொந்தக்காரர்களாக இருக்கின்றார்கள். உங்கள் உலகம் சுகபோக உலகம். உங்கள் அசிங்கப்பட்ட கருத்துக்களால் வசதியும், வலுவும் இல்லாதவர்ளையும் புண்படுத்தாதீர்கள். அது சிம்பாப்வே மக்களாக இருந்தாலென்ன இலங்கை மக்களாக இருந்தாலென்ன.

**- ஜோசப் கிருஷ்ணா -**

# இல்லாதது இடைவெளிதான்

அமெரிக்காவின் ஜெனிபர் கப்ரியாட்டி சிறந்ததொரு வீராங்கனை. ஆனால், செரினா வில்லியம்ஸ் அண்மைக்காலத்தில் பெற்றிருந்த விளம்பரமும், தொடர் வெற்றிகளும் அவரை மிகவும் பிரபல்யமான வீராங்கனை என்பதை நிருபித்து கொண்டிருந்தன.



செரினா "உன் கண்ணில் நீர் வடிந்தால்"

ஆனால், பிரெஞ் ஓப்பன் போட்டிகள் என்னவோ வேறு விதமாகத்தான் சென்று கொண்டிருக்கின்றன. ஆண்கள், பெண்கள் ஒற்றையர் போட்டிகளில் பிரெஞ்சுப் புரட்சியே நடந்து கொண்டிருக்கிறது. பல பிரபலங்கள் மூட்டை கட்டிக்கொண்டு புறப்பட்டுப் போய்விட்டார்கள். அதில் முதன்மை அதிர்ச்சி ஜெனிபர் கப்ரியாட்டியிடம், செரினா வில்லியஸ் கண்டதோல்வி. கால் இறுதிப்போட்டியிலேயே செரினா தோல்வியடைந்தது இன்னொரு பெரிய அதிர்ச்சி. தான் நன்றாக விளையாடவில்லை என்பதை செரினா ஒப்புக்கொள்கிறார். ஆனாலும், ஆரம்ப கட்டத்தில் இருவரும் சமதையாகவே விளையாடினாலும், நேரம் செல்லச் செல்ல ஜெனிபர் கப்ரியாட்டி ஆட்டத்தைத் தன் வயப்படுத்திக் கொண்டதைத் தடுக்கும் ஆற்றல், செரினாவுக்கு இல்லாமற் போயிற்று. ஜெனிபர் கப்ரியாட்டி 2001 இல் பிரெஞ் ஓப்பன் வென்றவர். பல போட்டிகளில் இலகுவாக அரை இறுதிப் போட்டிவரை வந்துசெல்பவர்.

எனவே, செரினாவின் உபாதைகள்... என்று நியாயங்கள் கூறிக்கொண்டு செல்ல முடியாது. கப்ரியாட்டியின் அதீத திறமை செரினாவை வீழ்த்தியது என்பதே உண்மை.

பிரெஞ் ஓப்பன் ஆரம்பத்திலேயே இந்தமுறை இறுதிப்போட்டியில் யார் யார் மோதப்போகிறார்கள் என்பதை ஊகிப்பது கடினமென்று ஊகம் தெரிவித்திருந்தாலும், கால் இறுதிப்போட்டியிலேயே செரினா தோல்வியடைவார் என்று யாரும் ஊகித்து இருக்கமுடியாது.

என்றாலும், செரினாவின் வெளியேற்றம் மனதுக்குத் துயரமானதுதான்.

**- ஜெயா.**

# ஜொனெக்ஸ் விளையாட்டுப் புதிர்

**01. 2004 பிரெஞ் ஓபன் ரென்னிஸ் மகளிர் ஒற்றையர் சம்பியன் யார்?**

**02. 2004 பிரெஞ் ஓபன் மகளிர் ஒற்றையர் இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்ற இரண்டு வீராங்கனைகளும் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள்?**

**03. பங்களாதேஷ் அணியை வெல்வேன் அல்லது பதவி துறப்பேன் என்னும் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் தலைவர் யார்?**

**விளையாட்டுப் புதிர் - 14**



**விண்ணப்பப்படிவம்.**

**முழுப்பெயர்:-** ..................................................

**முகவரி:-** ..................................................

**01.**

**02.**

**03.**

**விடைகள் எழுதப்பட்ட இவ் விண்ண்பப் படிவத்தைப் பின்வரும் முகவரிக்கு, 03.06.2004 முன்னதாக அனுப்புங்கள் அல்லது நேரில் கையளியுங்கள்.**

## விளையாட்டுப் புதிர் இல. 13 இன் விடைகள்

1) நஸார் ஹுசேன்
2) ஜஸ்ரின் ஹெனின்
3) மொறிஸ் கிறீன்

*விலாசம்:- விளையாட்டுப் புதிர் - இல. 14,*
*நமது ஈழநாடு, 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.*

பரிசு பெற்றவர் ஏ.சர்மிளா
620, நாவலர் வீதி, அரியாலை.

அனுசரணை:- ஜொனெக்ஸ் மல்ரி பலஸ் விளையாட்டு உபகரண விற்பனையாளர்கள்
**YONEX MULTI PALACE**
76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P.021-2227648, 0777166894.

# தகைமையை உறுதிப்படுத்துங்கள்



யாழ்.மாவட்ட கிரிக்கெட் அணி ஒன்று தம்புள்ள சென்று விளையாடி வநதுள்ளது. இந்த அணி யாழ். மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தின் 11 ஆவது அணியும் 19 வயதுக் குட்பட்டவர்களுக்கான ஐந்தாவது அணியுமாகும்.

வவுனியா, திருகோணமலை, மன்னார், மட்டக்களப்பு போன்ற அணிகளுடனான போட்டிகளில் யாழ்.மாவட்ட அணி கலந்து கொண்டுள்ளது. இந்த போட்டிகளில் தமது திறமையை வெளிப்படுத்தும் வீரர்கள் - வடக்கு - கிழக்கு மாகாண அணியில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்ற தகவல் காணப்படுகிறது.



"நாங்களும் தயார்"

திருகோணமலை மாவட்ட அணியுடன் ஆடிய யாழ்.மாவட்ட அணி - ஒன்பது விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. திருகோணமலை அணி வெறும் 32 ஓட்டங்களையே பெற்றுக்கொண்டது. யாழ் அணியின் மயூரன் ஐந்து விக்கெட்டுக்களையும், லொயிட் 3 விக்கெட்டுக்களையும் பெற்றுக்கொண்டனர்.

தொடர்ந்து யாழ் அணி ஒரு விக்கெட்டை மட்டும் இழந்து, 34 ஓட்டங்களை பெற்று வெற்றி இலக்கை அடைந்தது. இரண்டாவது போட்டி - வவுனியா மாவட்ட அணிக்கும் யாழ் அணிக்கும் இடையே நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய வவுனியா அணி 171 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. லொயிட் நான்கு விக்கெட்டுக்களையும், கிருஷ்ணகுமார் மூன்று விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். யாழ்.மாவட்ட அணி இந்த இலக்கை 35.2 ஓவரில் 4 விக்கெட்டுக்களை இழந்து 6 விக்கெட்டுக்களினால் வெற்றி பெற்றது. லொயிட் 46 ஓட்டங்களையும், கிருஷ்ணகுமார் 31 ஓட்டங்களையும் பெற்று துடுப்பாட்டத்திலும் தமது திறமையை வெளிப்படுத்தினர்.

மட்டக்களப்பு அணியுடனான மூன்றாவது போட்டியில் 45 ஓவரில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 272 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. யாழ்.மாவட்ட அணி லொயிட் 73, மதுஷன் 51, ரஜிவ்குமார் 40 ஓட்டங்களை பெற்றுக்கொண்டனர்.

மட்டக்களப்பு அணி பதிலுக்கு துடுப்பெடுத்தாடி, 96 ஓட்டங்களுக்குத் தனது அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து கொண்டது. லொயிட் 4 விக்கெட்டுகளையும், மயூரன் 3 விக்கெட்டுக்களையும், வினோதன் 2 விக்கெட்டுக்ளையும் பெற்றுக்கொண்டனர். மன்னார் அணியுடனான நான்காவது போட்டியிலும் யாழ் அணி வெற்றி பெற்று, தனது திறமையினை நிரூபித்துள்ளது. யாழ்.மாவட்ட அணி 45.1 ஓவரில் 298 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மன்னார் அணி 189 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

லொயிட், கிருஷ்ணகுமார், மயூரன், ரஜீவ்குமார் என்ற யாழ்.மாவட்ட அணியின் வீரர்கள தமது திறமைகளை வெளிப்படுத்தியுள்ளனர். லொயிட், கிருஷ்ணகுமார், மயூரன் பந்துவீச்சிலும் , துடுப்பாட்டத்திலும் தமது திறமைகளை நன்கு வெளிப்படுத்தியுள்ளனர். ஏழுபேர் வடக்கு - கிழக்கு அணிக்கு தெரிவாகியுள்ளனர். இந்த நிலையில் யாழ் மாவட்ட துடுப்பாட்டச் சங்கம் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பல காணப்படுகின்றன. திறமையாகச் செயற்படும் வீரன் ஒருவன் தேசிய அணியை நோக்கி முன்னேறுவதற்குரிய வசதிகள் எதிர்காலத்தில் செய்துகொடுக்கப்படவேண்டும். தமிழர் என்று பெயர்சொல்ல முரளிதரனையும், ஆர்னோல்ட்டையும் சாடிக்கொண்டிருப்பதை விடுத்து ஒவ்வொரு தமிழர்களிடமும் தேசிய அணியில் இடம் பெறலாம் என்ற எண்ணத்தை ஏற்படுத்த சிறுவயதில் இருந்தே நினைத்து செயற்பட வழியேற்படுத்திக் கொடுக்கவேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் தமிழர்கள் சாதனை வீரர்களாக எதிர்காலத்திலும் வருவதற்குவாய்ப்பு உண்டாகும்.

**- வெண்மதி.**

தெற்குத் திசையிலிருந்து.....

இந்திரஜித்

# மேற்குலகை திருப்திப்படுத்த முடியாத நிலையில் இந்தியாவை வசப்படுத்த முனையும் ஜனாதிபதி







இலங்கையில் தற்சமயம் நான்குமுனை எச்சரிக்கை அரசியல் சூழ்நிலை நிலவு கின்றது. ஐக்கிய தேசியக்கட்சி ஆளும் ஐக்கிய மக்கள சுதந்திர முன்னணிக்கு அடிக்கடி எச்சரிக்கை விடுத்து வருகிறது. தமது பெரும்பான்மை அரசாங்கத்தை கலைத்து தற்சமயம். ஜே.வி.பியுடன் அரசாங்கம் ஒன்றை அமைத்துள்ள ஜனாதிபதியை தொடர்ந்தும் அரசியலில் தொடர அனுமதிக்க கூடாது என்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் எண்ணமாகும்.

அவ்வாறு ஜனாதிபதி செய்தமை காரணமாக மீண்டும உடனடியான அரசாங்கத்தை அமைக்க முடியாத நிலை ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஏற்பட்டுள்ளமையே இதற்கான காரணமாகும். பலமான எதிர்க்கட்சிக் கூட்டணியை தம்வசம் கொண்டிருந்தாலும் அந்தக் கூட்டணியின் மீது அதீத நம்பிக்கை வைக்க முடியாத நிலையிலேயே ஐக்கிய தேசிய கட்சியின் தலைமை தடுமாறிக் கொண்டிருக்கிறது.

எந்த அரசாங்கம் வந்தாலும் அந்த அரசாங்கத்தின் அமைச்சரவையில் அங்கம் வகிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்ட இலங்கை தொழிலாளர் காங்கிரஸையும் எப்போதும் ஓரளவுக்காவது முஸ்லிம் மக்களின் நலன் பேணப்பட்டால் சரி என்ற கருத்தில் அரசாங்கத்தில் அங்கம் வகிக்க காத்திருக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸையும் தம்வசம் கொண்டிருப்பதால் ஐக்கியதேசிய முன்னணியின் எச்சரிக்கையை ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

எனினும் தமது கூட்டமைப்புக்குள்ளேயே எச்சரிக்கும் சக்தியாக உருவெடுத்துள்ள ஜே.வி.பி எனப்படும் மக்கள் விடுதலை முன்னணியின் எச்சரிக்கையே ஜனாதிபதியின் அரசியலுக்குச் சற்று அச்சுறுத்தலை கொடுத்துக் கொண்டிருக்கிறது. இது ஜனாதிபதி சமாதானம் தொடர்பில் மேற்கொள்ள நினைககும் சில நடவடிக்கைகளைக் கூட பாதிப்பதால் ஜனாதிபதியின் எண்ணங்களுக்கு அவ்வப்போது சறுக்கல்கள் ஏற்படுகின்றன.

முன்னர் ஜனாதிபதி பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைவியாக இருந்த போது கொண்டிருந்த செல்வாக்கு தற்சமயம் பூஜ்ஜிய நிலையிலேயே காணப்படுகிறது. ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களுக்குள் இருந்து கொண்டு தமது கட்சி அரசியலை வளர்த்துக் கொள்ள முனைந்து வருகிறது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி.

அதில் இதுவரை பாரிய அளவில வெற்றியையும் அது கண்டிருக்கிறது. மக்கள் விடுதலை முன்னணியின் எச்சரிக்கை அரசியல் நகர்வானது நிர்வாகம் என்ற நிலையில் பார்க்கும் போது ஜனாதிபதிக்கும் அவரின் கட்சிக்கும நன்மை பயக்கும் தன்மையை கொண்டிருக்கிறது. ஆனால் நாட்டில் சமாதானம் என்ற நிலையில் யோசிக்கும் போது பாரிய எதிர்காலச் சிக்கலைக் கொடுத்துள்ளது.

நாட்டின் இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பரவலாக்கல் மூலம் தீர்வுகாண முடியும் என ஜனாதிபதி கொள்கை அளவில ஏற்றுக் கொள்ளும் பக்குவத்தை கொண்டிருந்தாலும் நிர்வாக பரவலாக்கல் கொள்கையை கொண்டுள்ள மக்கள் விடுதலை முன்னணியின் கொள்கையை மாற்றி அந்தக் கட்சியினரை தம்வசப் படுத்துவதில இதுவரை வெற்றிகாணவில்லை.

இதனால் தான் ரணில் விக்கிரமசிங்கவின் சமாதானத்திட்டத்தை விமர்சித்து ஆட்சிக்கு வந்துள்ள ஜனாதிபதிக்கு தம்வசம் நிறைவேற்று அதிகாரம் இல்லாமலேயே ரணில் விக்கிரமசிங்க தமிழீழ விடுதலைப புலிகளுடன் செய்து கொண்ட போா நிறுத்த ஒப்பந்தத்திற்கு சமமான நகர்வைக் கூட நிறைவேற்று அதிகாரத்தை கையில் வைத்துக் கொண்டு செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனை மக்கள் விடுதலை முன்னணியுடைய எச்சரிக்கையின் தாக்கம் என்றே சொல்லவேண்டும். தென்னிலங்கை அரசியலில் நிலவும எச்சரிக்கை கலாசாரத்தை விட தற்சமயம் தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்துள்ள எச்சரிக்கையே இலங்கையின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் எச்சரிக்கையாக விளங்குகின்ற வலிமையைப் பெற்றுள்ளது.

ஜனாதிபதி தொடர்ந்தும் சமாதான முயற்சிகளில் காலதாமதத்தை ஏற்படுத்தினால தாம் மாற்று நடவடிக்கைகளுக்கு செல்ல வேண்டியிருக்கும் என்ற தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்செல்வனின் எச்சரிக்கையே தற்சமயம் இலங்கை அரசியலில் தாக்கம் மிகுந்த எச்சரிக்கையாகக் கருதப்படுகிறது.

ஏனெனில் முன்பு கூறப்பட்ட இரண்டு எச்சரிக்கைகளும் உள்ளூர் அரசியலில் மாத்திரமே கவனத்தை ஈர்க்கக்கூடியன. ஆனால் தமிழீழ விடுதலைப்புலிகளின் எச்சரிக்கை சா்வதேச கவனத்தை ஈர்க்கக் கூடியது. அதனை விட இலங்கையின் அரசியல் மற்றும் பொருளாதாரத்தை மேலும் பாதாளத்துக்கு தள்ளி விடக் கூடிய வலிமையை கொண்டுள்ளமையையும் மறுக்கமுடியாது.

தடுமாறும் தென்னிலங்கை அரசிய லில் ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்த சமாதானம் நாட்டின் இறைமைக்கு பாதிப்பை கொண்டு வந்துள்ளதாக கூறி அவரின் ஆட்சியை கலைத்துவிட்ட ஜனாதிபதி தற்போது எவ்வாறான சமாதானத்தை முன்னெடுப்பது என்ற குழப்பத்தில் ஆழ்ந்துள்ளார். தன்னாட்சி அதிகாரத்தை தமிழீழவிடுதலைப்புலிகளுக்கு வழங்கி தற்காலிகமாகவேனும் தமது அரசியல் ஸ்திரத் தன்மையை காப்பாற்றிக் கொள்ளவேண்டும் என ஜனாதிபதி எண்ணினாலும் மக் கள் விடுதலை முன்னணி அதற்கு இடம் கொடுப்பதாக இல்லை.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டால் மட்டுமே தமது ஆட்சி நிலைக்கும் என ஜனாதிபதி நினைககிறார். ஆனால் இதுவே தமது அரசிய லுக்கு ஆபத்தை கொண்டு வந்துவிடும் என மக்கள் விடுதலை முன்னணி நினைக் கிறது.

கடந்த பொதுத் தேர்தலில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு தன்னாட்சி அதிகாரம் வழங்கப்படமாட்டாது என்ற வாக்குறுதியை முன்வைத்தே மக்கள் விடுதலை முன்னணி தற்போதைய ஆட்சியில் முக்கிய பங்காளிக் கட்சியாக தம்மை நிலை நிறுத்திக் கொண்டது. எனினும் கால ஓட்டத்தில் நீண்டகால முரண்பாடற்ற அரசியலை கருத்திற் கொண்டு தன் னாட்சி அதிகாரத்தைக் கூட நிபந்தனைகளின் அடிப்படையில் ஏற்றுக்கொள்ளும் நிலைக்கு மக்கள் விடுதலை முன்னணி வரவேண்டிய சூழ்நிலை தென்னிலங்கை அரசியலில் ஏற்பட்டுள்ளது.

ஆனால சந்தர்ப்பவாத அரசியலுக்கு மத்தியில் அடுத்துவரும் மாகாணசபை தேர்தலுக்கு மக்கள் விடுதலை முன்னணி தயாராக வேண்டியுள்ளமையால் மீண்டும் தமது பழைய கொள்கையை மக்கள்முன வைக்க அந்தக் கட்சி தீர்மானித்துள்ளது.

இதன் மூலம் தாம் 6 மாகாணசபைகளுக்குமாக நிறுத்தியுள்ள 74 வேட்பாளர்களில் 70 வேட்பாளர்களையாவது வெற்றி பெறச் செய்ய முடியும் என்ற நம்பிக்கை மக்கள் விடுதலை முன்னணிக்கு இருக்கிறது. அது சந்திரிகாவின் நிறை வேற்று அதிகாரத்தை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள் மேலும் ஒருபடி குறைக்கப் போகிறது.

மறுபுறத்தில் ஐக்கிய தேசியக்கட்சியின் மாகாண சபைக்களம் எவ்வாறு அமையப் போகிறது என்பது அடுத்த ஒரு மாதத்துக்குள் ஜனாதிபதியின் அரசாங்கம் சமாதானம் உட்பட ஏனைய நடைமுறைப் பிரச்சினைகளை எவ்வாறு கையாளப் போகிறது என்பதிலேயே தங்கியுள்ளது.

தற்போது நாட்டில் அரிசி மற்றும் கோதுமை மா என்பவற்றின் விலைகளில் பாரிய அதிகரிப்புகள் ஏற்படும் ஏதுநிலைகள் அதிக ரித்துள்ளன. இலங்கை மக்களின் அத்தி யாவசிய உணவுகளான இவற்றில் பாரிய விலை உயர்வு ஏற்பட்டால் அது மக்கள் விடுதலை முன்னணியை காட்டிலும் ஜனாதி பதியின் தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் வெற்றி வாய்ப்பையே குறைக் கக்கூடும்.

இதனையே அண்மையில சுட்டிக் காட்டியிருந்த முன்னாள் நிதியமைச்சா் ஜி.எல்.பீரிஸ் மாகாணசபை தேர்தல் வரைக்குமாவது அரசாங்கம் அத்தியாவசியப் பொருட்களின் விலையை கட்டுப்படுத்தி வைக்க முயற்சிக்கும் என்ற எதிர்வை வெளியிட்டிருந்தார். ஜனாதிபதியின் தலைமையிலான அரசாங்கம் தற்சமயம் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையை எவ்வாறு சமாளிக்கப் போகிறது.

வெளிநாடுகளின் உதவியோடு ஜனாதிபதி தற்போதைய நடைமுறைப் பிரச்சினைகளை கட்டுக்குள் கொண்டுவருவதற்கும் இனப்பிரச்சினைத் தீர்வில் இந்தியாவின் ஆதரவையே பெரும்பாலும் எதிர்பார்த்தும் காத்திருக்கிறார். ஏனெனில் ஏனைய மேற்குலக நாடுகள் இலங்கையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரமபிக்கப்பட்டால் மட்டுமே முழு நாட்டின் அபிவிருத்திக்கும் நிதியுதவி வழங்கமுடியும் என நிபந்தனை விதித்துவிட்டன. கடந்த முதலாம் திகதி பிரசல்ஸ் மாநாட்டில் இது மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போதைய உள்ளூர் அரசியலை மையமாகக் கொண்டு மேற்குலக நாடுகளை திருப்திப்படுத்த முடியாத நிலை ஜனாதிபதிக்கு ஏற்பட்டுள்ளது. எனவே அவர் இந்தியாவை மையப்படுத்திக் கொண்டு தமது நகர்வை மேற்கொள்ள முனைந்து வருகிறார்.

இதன் ஒரு கட்டமாகவே உத்தேச இந்திய - இலங்கைப் பாதுகாப்பு ஒப்பந்தத்துக்கு உரமூட்ட இலங்கை அரசாங்கம் முனைந்து வருகிறது. அத்துடன் இந்தியாவில் இருந்து அவசர நிதியுதவிகளைப் பெற்றுக்கொள்ளவும் இலங்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

ஜனாதிபதியின் தரப்புக்கு இவ்வாறான நகர்வுகள் எதிர்வரும் மாகாணசபை தேர்தல் வரையிலும் மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது அதேநேரம் சமாதான முனைப்புக்களையும் தாமதப்படுத்த வேண்டிய தேவை அவருக்கு ஏற்பட்டுள்ளது.

மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக ஏதாவது நடவடிக்கைகளை மேற் கொண்டால் அது மாகாணசபைத் தேர்தலில் கட்சியின் வாக்குகளை குறைததுவிடும் என்பதன் காரணமாகவே ஜனாதிபதி தாமதப் போக்கை கடைப்பிடித்து வருகிறார்.

எனினும் தமிழீழ விடுதலைப் புலிகள மேற்கொள்ளப்போகும் சர்வதேசத்தை மையமாக கொண்ட அடுத்தகட்ட ராஜதந் திர நகர்வானது ஜனாதிபதியின் தேர்தலை மையமாகக் கொண்ட தாமதப் போக்கிற் கும் அவரின் கட்சி ரீதியான செயற்பாட்டுக் கும் தக்க பதிலடியை கொடுக்கும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

**தடுமாறும் தென்னிலங்கை அரசியல் ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்த சமாதானம் நாட்டின் இறைமைக்கு பாதிப்பை கொண்டு வந்துள்ளதாக கூறி அவரின் ஆட்சியை கலைத்துவிட்ட ஜனாதிபதி தற்போது எவ்வாறான சமதானத்தை முன்னெடுப்பது என்ற குழப்பத்தில் ஆழ்ந்துள்ளார். தன்னாட்சி அதிகாரத்தை தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு வழங்கி தற்காலிகமாகவேனும் தமது அரசியல் ஸ்திரத் தன்மையை காப்பாற்றிக் கொள்ளவேண்டும் என ஜனாதிபதி எண்ணினாலும் மக்கள் விடுதலை முன்னணி அதற்கு இடம் கொடுப்பதாக இல்லை.**




## கடல்

**உலகச் சுற்றுச் சூழல் தினத்தை முன்னிட்டு இக்கவிதை பிரசுரமாகிறது**

உலகத்தாயின்
விழிக்குளம்
மணல் இமைகளை
விலத்தி
மலர்ந்திடும் பார்வை

நீர் நிலைகளின்
அரசன்
நுரைப்பூக்கள் மலரும்
நந்தவனம்

மீன்களின் வாழ்க்கையை
எழுதும்
உப்பு நீர் மை

மேகங்களின்
தாய்

படகுகளில்
சொர்க்கம்
சில வேளைகளில்
நரகம்

கடற்புலிகளின்
தரைப்பாதை
கரும்புலிகளின்
உயிர்ப்பாதை
ஈழத்தமிழர்களின்
குருதியோட்டம்

உப்பிட்டவரை உள்ளளவும்
நினைப்பது போல்
உப்பையே உள்ளளவும்
நினைக்கும் உயிர்

சூரிய ஒளிக்கதிர்களை
மொழிபெயர்க்கும்
தண்ணீர்த்தாள்

வெட்கம்
அலை
கோபம்
கொந்தளிப்பு
வானத்தின்
கண்ணாடி

பெரிய தாய்
பலஉயிர்களை
தன் கர்ப்பத்தில்
சுமக்கிறது
மொத்தத்தில்
வெய்யிலில் கிடந்தாலும்
எதுவும்வற்றாத
காயாத
கருவாடு

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்*
*கற்றனைத்து ஊறும் அறிவு*
திருக்குறள்

# நமது நோக்கு

## தமிழீழ மாணவர் எழுச்சிநாள் சில நினைவுகள்... சில பகிர்வுகள்...

இன்று தமிழீழ மாணவர் எழுச்சிநாள்

தமிழர் தாயகம் எங்கனும், புலம்பெயர் தமிழர்வாழும் சகல நாடுகளிலும் இந்த நாள் உணர்வெழுச்சியுடனும், தமிழ்த் தேசியத்தின் அடிப்படையிலான விழிப்புணர்வுடனும் கொண்டாடப்படும் இந்த நாள், இன்றைய ஈழத்தமிழரின் விடுதலையெழுச்சிக்குப் புதிய வீறார்ந்த போராட்ட வடிவத்தை அறிமுகம் செய்து, பேரினவாத அடக்குமுறைக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தை ஒரு இலட்சிய வேட்கையுடன் கூடிய மாற்றுவழி ஏதுமற்ற செயல்முறையாக இனங்காட்டிய இளவேங்கை பொன்.சிவகுமாரனின் நினைவு நாளும் இதுவேயாகும்.

அதனால் தமிழீழ மாணவர் எழுச்சி நாளாக இதனைக் கொண்டாடுவதும் மிகவும் பொருத்தமான விடயமேயாகும்.

தமிழ் மக்கள் பேரினவாத சிங்கள ஆட்சியாளர்களால் இலங்கை சுதந்திரம் அடைந்த காலம் முதலே மிகவும் திட்டமிட்ட வகையில் அரசியல் ரீதியாக ஒடுக்கப்பட்டும், வாழ்வியல் ரீதியாக அடக்கப்பட்டும் அவர்களின் பாரம்பரிய தாயக வாழ்நிலங்கள் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களால் ஆக்கிரமிக்கப்பட்டும் இனக்கலவரங்களால் அவர்களின் உயிர் மற்றும் உடமைகள் அழிக்கப்பட்டும் மூன்றாம் தரப் பிரஜைகளிலும் கேவலமாக அவமதிக்கப்பட்ட வரலாற்றுத் துயரமானது இரத்த வாடை வீசும் நீண்ட சரித்திர நிழ்வுகளை உள்ளடக்கியதாகும். இந்த வரலாற்றுக்குக் காரணமான பிதாமகர்கள் இதனைப் பௌத்த தர்மத்தின் பெயரால், சிங்களக் கலாசாரத்தின் பெயரால், அரசியல் மேலாதிக்க பதவி வெறியுடன் மேற்கொண்டமைதான் அவமானகரமான விடயமாகும்.

ஒரு ஒழுங்கான இடைவெளியில் தமிழ் மக்கள் தம்மீது கட்டவிழ்த்து விடப்படும் சிங்கள அரசியல் காடைத்தனத்திற்கு எதிராக, ஜனநாயக உரிமைகளின் அடிப்படையில் சாத்வீக ரீதியில் நியாயம்கோரி நடத்திய போராட்டங்களையெல்லாம் சேனநாயக்கா முதல் சந்திரிகாவரை இலங்கையின் ஆட்சி அதிகாரங்களைத் தம்வசம் முழுமையாகவே வைத்திருந்த அனைவரும் ஆயுத முனையில் இராணுவரீதியில் அடக்கி அழித்த அவலங்கள் குறித்து எழுதவேண்டிய அவசியமே இல்லை.

அவர்கள் தமிழர்களின் மனித உரிமைகளை, ஜனநாயக உரிமைகளை மதிக்கும் அரசியல் நாகரிகம் அறிந்தவர்களாக ஆட்சி பீடத்தில் அமர்ந்து இயங்கியதும் இல்லை. இயங்க விரும்பியதும் இல்லை.

தொலை நோக்கு அரசியல் மற்றும் தேசிய நலன் குறித்த சிங்களத் தலைவர்கள் தமிழ் மக்களுக்கு எதிரான செயற்பாடுகளை சிங்கள மக்களின் உணர்வுகளில் ஏற்றி, அதனை ஓர் வெறியாக்கி தமது அரசியல் நலன்களை, அபிலாஷைகளை நிறைவேற்றிக்கொள்ளும் மனோநிலையைக் கொண்டவர்களாக இயங்கியதை சிங்கள மக்கள் உணராமல் இருந்தமைதான் இன்று இந்த நாடு அனுபவிக்கும் சகல நெருக்கடிகளுக்கும் காரணமாகும்.

ஒரு இனத்தை அழிக்க அதன் கலாசார பாரம்பரியத்துடன், பண்பாட்டுக் கோலங்களையும், கல்விசார் அறிவெழுச்சியையும் சிதைத்தாற்போதும் என்ற பேரினவாதத் தந்திரோபாய அரசியற் கோட்பாட்டை, சிங்கள ஆட்சியாளர்கள் அச்சொட்டாக அடியொற்றி, தமிழ் மக்களின் எதிர்கால சமுகத்தினரை அழிக்கச் சதிசெய்ததன் வெளிப்பாடாகவே தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சியைப் பெருமளவில் பாதிக்கும் தரப்படுத்தல் முறையை அரசு அமுல் செய்தது.

அப்போதிருந்த மிதவாத தமிழ் அரசியல் தலைவர்களின், இதற்கெதிரான கூக்குரல்கள் சிங்களத் தலைவர்களின் காதுகளில் கிணற்றில் எறிந்த கல்லாகியது. அரசின் இந்தச் செயலால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட தமிழ் மாணவர்கள் அதற்கெதிராகக் கிளர்ந்தெழ துணிந்தபோதே தமிழ் மக்களிடையே அவர்களின் விடுதலைப்போராட்டம் தொடர்பான புத்தெழுச்சி ஏற்பட்டதென்றால் அதில் மிகையில்லை.

அந்தப் புத்தெழுச்சியே ஆயுதப் போராட்டத்திற்கான மூல வித்தாகும். 1970 ஆம் ஆண்டுகளில் கருக்கொண்ட தமிழ் மாணவர் எழுச்சி என்ற அந்தப் புயல் மையம், இன்று மூன்று தசாப்தங்களைக் கடந்து ஈழத்தமிழர்களுக்கு மட்டுமல்லாது உலகத் தமிழர்களுக்கே ஓர் உன்னதமான அடையாளத்தையும், பொது விலாசத்தையும் சர்வதேச அளவில் பெற்றுத் தந்துள்ளது.

மாணவர் சக்தி தான் உலகின் மாபெரும் சக்தி.

உலகின் எதிர்கால உன்னதத்தின் வளர்ச்சிப்போக்கை நிர்ணயிக்கும் சக்தி. எனவேதான் மாணவர் சமுகத்தின் எழுச்சியே ஒரு தேசத்தின், விடுதலைப் போராட்டத்தின், ஒரு இனத்தின் தலைவிதியை நிர்ணயிக்கும் சக்தியாகவும் ஆகிவிட்டது. சிவகுமாரன் மூட்டிய விடுதலைக் கனலின் பொறிதான் இன்று பொங்குதமிழின் கொதிப்பெழிச்சிக்கும் மூலக்கனலாகி சுவாலை வீச வைத்தது என்ற உண்மையை தமிழ் மக்கள் மறக்கமுடியாது.

அவனது கனவை விழிகளில் ஏந்தியும், அவனது இலட்சிய உறுதியை மனதுள் வாங்கியும் அவனது இலக்கு நோக்கிய தடத்தில் கால்களைப் பதித்தும், தமிழ் மண்ணினதும் மக்களினதும் விடியலுக்காக தம் வாழ்வை அர்ப்பணித்த அனைவரும் எதிர்கால மாணவர்கள். தமது இலட்சிய இலக்கினை சரியான முறையில் இனங்காண வழிகாட்டியுள்ளனர் என்றே கூறவேண்டும்.

இடப்பெயர்வின் பின்னர் இடைக் காலத்தில் எம்மண்ணை ஆக்கிரமித்து நிலைகொண்டு பன்முகப்பட்ட ஊடுருவல்களை திட்டமிட்டு மேற்கொண்ட அன்னிய சக்திகளின் உளவியல் ரீதியான நடவடிக்கைகள் காரணமாக தமிழ் மாணவர்களைப் பலவீனமான ஒரு சாராரின் செயறபாடுகள் கவலையை உண்டு பண்ணிவரும். இந்த வேளையில் - இன்றைய மாணவர் எழுச்சி நாளை அவர்கள் மீண்டும் தமது சுயத்தை உணர்ந்து, மண்ணின் விடுதலையுடன் மானிட விடுதலையையும் வென்றெடுக்க இணைத்துக்கொள்ளும் புத்துயிர்ப்பினைப் பெறவைக்க உறுதி பூண வேண்டும் என்பதே தமிழ் மக்களின் பெருவிருப்பாகும்.

## நாடும் நடப்பும்




**செய்தி**
ரவூப் ஹக்கீம் மீதான பாலியல் குற்றச்சாட்டுகள் அரசியல்ரீதியில் அவருக்கு பாரிய அழுத்தங்களை ஏற்படுத்திவருகிறது.

# தீவகத்துக்கான பாஸ் நடைமுறை குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவில் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதிக்கான பாஸ் நடைமுறை குறித்த விசாரணை நேற்று முன்தினம் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு ஆலுவலகத்தில் நடைபெற்றுள்ளது.

புங்குடுதீவு பொதுமக்கள் தொடர்பாடல் அதிகாரி இந்த விசாரணைக்குச் சமுகமளித்திருந்தார். யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பாளர் றுவான் சந்திரசேகரா இந்த விசாரணையை நடத்தினார்.

அங்கு சமுகம் தந்திருந்த இராணுவ அதிகாரி தீவுப்பகுதிக்கான பாஸ் நடைமுறை மிக நீண்ட காலமாகவே இருந்து வருதாகவும் அதனை மாற்றுவதென்பது தற்போது சாத்தியமற்றதெனவும் தெரிவித்தார். எனினும், தாம் இராணுவத் தலைமையகத்துடன் தொடர்புகொண்டு இது தொடர்பாகக் கலந்துரையாடிவிட்டு விரைவில் நல்ல முடிவு தருவதாகவும் தெரிவித்தார்.

எனினும், யாழ். மனித உரிமை ஆணைக்குழுவின் இணைப்பதிகாரி இந்தப் பாஸ் நடைமுறை ஒரு மனித உரிமை மீறல் எனவும், ஒருவர் தனது நாட்டில் சுதந்திரமாக உலாவருவதற்கும், போக்குவரத்தை மேற்கொள்ளுவதற்கும் எவரும் தடைவிதிக்கவோ, கட்டுப்படுத்தவோ அதிகாரம் கொண்டிருக்க முடியாது எனவும் தெரிவித்தார்.

அத்தோடு, இந்தப் பாஸ் நடைமுறையானது பொது மக்களுக்குப் பெரும் சிரமததை ஏற்படுத்தி வருவதனையும் சுட்டிக் காட்டியுள்ளார். (ப)

# மோட்டார் சைக்கிள் திருடமுற்பட்டவர்களை பொதுமக்கள் மடக்கிப் பிடித்தனர்

யாழ். நகரப் பகுதியில் மோட்டார் சைக்கிளை திருடமுற்பட்ட இருவர் பொது மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டு பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் யாழ். நகர களஞ்சியம் ஒன்றின் முன் இடம்பெற்றது. இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

நபர் ஒருவர் தனது மோட்டார் சைக்கிளை மேற்படி களஞ்சியத்திற்கு முன்பாக நிறுத்திவிட்டு பொருட்கள் வாங்குவதற்காகக் கடைக்குள்ளே சென்றபோது இரண்டு நபர்கள் கத்தியுடன் வந்து கடைக்கு முன்னால் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளின் வயரை அறுத்துவிட்டு அதனை திருடமுற்பட்டனர்.

இதனை அவதானித்த மோட்டார் சைக்கிளின் உரிமையாளர் தனது மோட்டார் சைக்கிளை இருவர் திருடிச் செல்கின்றனர் எனக் கூறியதையடுத்து அங்கு நின்றிருந்த பொது மக்களின் உதவியுடன் அந்த நபர்கள் மடக்கிப் பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்ட பின்னர், பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். இவர்கள் இருவரும் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக மோட்டார் சைக்கிளின் உரிமையாளர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (தீ)

# சிறுவர் செயற்திறன் அரங்கப் பயிற்சி புதிய பிரிவுக்கு விண்ணப்பிக்கலாம்!

(யாழ்ப்பாணம்)

செயற்திறன் அரங்க இயக்கம் சிறுவர் அரங்கப் பயிற்சிக்கான இரண்டாவது பயிற்சிப் பிரிவை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளது. இந்தப் பயிற்சிநெறிக்குப் பிரதம பயிற்றுவிப்பாளராக கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கம் செயற்படுவார்.

இதில் ஆர்வமுடைய இளைஞர், யுவதிகள் இந்தப் பயிற்சி நெறியில் பங்குபற்ற விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பிப்பவர்களின் அடிப்படைக் கல்வித் தகைமை க.பொ.த உயர்தரத்தில். சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அதிலும் நாடக பாடத்தில் சித்தியடைந்திருந்தால், விசேட தகுதியாகக் கருதப்படும்.

பயிற்சி நான்கு மாதங்கள் நடைபெறும். பயிற்சிக் காலத்தில் சிறுவர் அரங்கிற்கான நாடகம் ஒன்று எழுதித் தயாரிக்கப்படும். பயிற்சியைச் சிறப்பாகப் பூர்த்தி செய்பவர்கள் செயற்திறன் அரங்க இயக்கத்தினால் தொழில்சார் ஆற்றுகையாளராகச் செயற்பட வழிப்படுத்தப்படுவார்கள்.

பயிற்சிக்கு இருபது பேர் மட்டும் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். நேர்முகப் பரீட்சையில் களப் பயிற்சிமூலம் மாணவர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள்.

சிறுவர் அரங்கப் பயிற்சியைப் பெற விரும்புவோர் சுய விபரங்களுடன் நேரிலோ, கடிதமூலமாகவோ 'அருளகம்' ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள செயற்திறன் அரங்க இயக்க அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு நிர்வாகத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர். பயிற்சியின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

இந்தப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கவேண்டிய இறுதித் திகதி எதிர்வரும் 12 ஆகும் பயிற்சிகள் ஜூன் மாத இறுதிப் பகுதியில் ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# பொய்ப் பிரசாரம் மூலம் இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பு

இதுவரை இரு சிறிய இராணுவ அணிகளை ஆபிரிக்க நாடுகளுக்கு ஐ.நா சேவைகளுக்கென இலங்கை அனுப்பியுள்ள நிலையில், ஐ.நாவல் பணியாற்ற வெளிநாடுகளுக்குச் செல்வதற்காக இராணுவத்திற்கு ஆள் தேவை என்ற கவர்ச்சிப் பிரசாரத்தில் அரசு மீண்டும் ஆட்சேர்ப்பை முடுக்கிவிட்டுள்ளது.

வெளிநாடு செல்லும் வாய்ப்பு என்றதும் ஏராளமான சிங்கள இளைஞர்கள் தினமும் இராணுவ ஆட்சேர்ப்புக்கு வந்து குவிவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வகையில் ஆட்கள் சேர்க்கப்பட்டாலும், முதலில் பயிற்சி, பயிற்சியின்பின் தெரிவாகும் ஒரு சில ருக்கே ஐ.நா படையில் பணிபுரியும் வாய்ப்புக்கிடைக்கும் என்பதைத் தெரிவிக்காமல், தெரிவாகும் அனைவரும் ஐ.நா. படையில் வெளிநாட்டுக்கு அனுப்பப்படவுள்ளார்கள் என பொய்ப்பிரசாரம் செய்யப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐந்தாம் வகுப்புக்கூடப் படிக்காது, வறுமையின் பிடியால் கூலி வேலைசெய்யும் இளைஞர், யுவதிகளும், வேலையற்ற இளைஞர்களும் வெளிநாடு செல்லும் வாய்ப்பை எண்ணி, அதிகளவில் தற்போது படையில் சேர்வதற்கு ஆர்வம்காட்டி வருகிறார்கள்.

கடந்த சில வருடங்களாக - இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான முன்னெடுப்புக்கள் நாடளாவியரீதியில் பலமாக முடுக்கிவிடப்பட்டபோதும், சம்பள உயர்வு, பட்டா, போனஸ், மீதிக்குடும்பத்தினருக்கான சலுகைகள் என்று பல கவர்ச்சித் திட்டங்கள் அறிவிக்கப்பட்ட போதும், யாரும் படையில் சேர விருப்பம் தெரிவிக்காததால் ஆட்சேர்ப்பு முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்தன.

தற்போது வெளிநாடு செல்லும் வாய்ப்பை முன்வைத்து ஏராளமான சிங்களவர்களைப் படையில் சேர்த்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது மேலதிக படையினர் யாரையும் ஐ.நா. படைக்கு இலங்கையில் இருந்து கேட்காத நிலையில் இத்தகைய பொய்ப்பிரசாரங்களைச் இலங்கை மேற்கொண்டு வருவதாகவும் கூறப்படுகின்றது.

பேராசிரியர் அ.சண்முகதாஸ்

# சவால்களை எதிர்கொள்ளும் தமிழ் மாணவ சமூகம்...

மாணவர்கள் இன்று பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியவர்களாயுள்ளனர். எம்முடைய பிரதேசங்களிலே வாழ்கின்ற மாணவர்களுடைய நிலை இன்னும் சிக்கல் மலிந்ததாயுள்ளது. வேகமாக வளர்ந்துவரும் தகவல் தொழிநுட்பம் மாணவர்கள் விரும்பியோ, விரும்பாமலோ, அறியவேண்டிய, ஏற்றுக்கொள்ள வேண்டிய வித்தையாக அமைந்துவிட்டது.இந்த வித்தையை கற்பிப்பதற்கும், கற்பதற்கும் பெருமளவிலான முயற்சிகளை உலக நிறுவனங்கள் நாட்டரசு, கற்றவர்கள், வணிகர்கள் மேற் கொண்டு வருகின்றனர்.

நகர்ப்புறங்களிலேயுள்ள பள்ளிகளிலே படிக்கும் மாணவர்களிற்கும் அந்த பகுதிகளிலே வாழுகின்ற மாணவர்களுக்கும், பணம் படைத்த குடும்பத்திலுள்ள மாணவர்களுக்கும், இந்த வித்தையுடன் நெருங்கிய தொடர்பினை ஏற்படுத்த முடிகின்றது. பல கிராமப்புற மாணவர களுக்கு இந்த வாய்ப்புகள் இன்னும் கிடைத்தபாடில்லை. ஆனால், எம்முடைய கல்வி உயரதிகாரிகள் தம்மாலான முயற்சிகளை மேற்கொள்கிறார்கள்.

மாணவர்கள் எதிர் நோக்கும் இன்னொரு சவால், அவர்களுக்கும் மூத்தவர்களுக்கும் இடையே ஏற்பட்டுள்ள பெரிய இடைவெளியாகும். மூத்தவர்கள் தத்தம் உயர்ச்சிகளிலே கண்ணூன்றியவர்களாயுள்ளனர். ஆசிரியர்களிலே பலர் தம்முடைய வாண்மை விருத்தியிலே கருத்துடையவர்களாயிருக்க வேண்டியவர்களாய் உள்ளனர். பெற்றோர்கள், பிள்ளைகள் பள்ளிக்குப் போக வேண்டும், பின்னர் பல்கலைக்கழகம் போகவேண்டும் என்ற எண்ண முடையோராய் உள்ளனர்.

பல்கலைக்கழகம் தவிர உயர் கல்வியை பெறுகொள்ள வேறு நிறுவனங்களும் உள்ளன என்பதை இந்த மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் மனத்திலே ஊன்ற வைக்க வேண்டியுள்ளது. இதனால் தலைமுறையினரான மாணவர்களை வழிப்படுத்துவதில், நெறிப்படுத்துவதில் மூத்த வர்களாகிய நாம் தவறிவிட்டோமோ என்று எண்ண வேண்டியுமுள்ளது. போரின் விளைவுகளாலும் வேறு பல காரணங்களாலும் மனவடுக்களையும் விகாரங்களையுமுடைய ஒரு தலைமுறை தவிர்க்க முடியாத படி உருவாகியுள்ளது இதனை நன்கு உணர்ந்து செயற்படவேண்டியவர்களாயுள்ளோம். இவர்களை வழிப்படுத்த மூத்தவர் களாகிய நாம் உண்மையுடையவர்களாயிருக்க வேண்டிய தேவை இருக்கின்றது. உண்மை நிலைகளை பிள்ளைகளுக்கு எடுத்துக் கூறினால் அவர்கள் உணர்ந்து தம் நடவடிக்கைகளை மேற்கெள்வர். சில வேளைகளிலே அர்ப்பணிப்புக் கூட நலம் செய்ய வேண்டியுள்ளது. பிள்ளை படிக்கின்ற வேளையிலே நாம் தொலைக்காட்சிப் பெட்டிக்கு முன்னாலேயிருந்து சின்னத்திரை பார்த்துக் கொண்டிருப்பது சில வேளை பிள்ளையினுடைய மனநிலையிலே அநீதியாகத் தோன்றலாம். தன்னுடைய தற்போதைய பணி படிப்பது என்று பிள்ளை எண்ணிச் செயலாற்றினால் நிலைமை மிக உயர்ந்ததாயிருக்கும். இல்லாவிடில், நாம் ஒரு சிறிய அர்ப் பணிப்பை செய்ய வேண்டும்.

ஒவ்வொரு பிள்ளையினுடைய நடத்தைக்கும், போக்குக்களுக்கும் பெற்றோர் பொறுப்பேற்றால் பல சிக்கல்கள் இலகுவிலே தீர்ந்து விடும். பள்ளியிலே ஆசிரியர்களும் வீட்டிலே பெற்றோர்களும் இவர்களை வழி நடத்தினால், ஓர் உயரிய மாணவ சமூகத்தினை நாம் கட்டியெழுப்பலாம். ஓர் உன்னத தமிழ் மாணவ சமுகம் என்று பலரும் புகழ நாம் வாழவேண்டும். இன்றைய நாளிலே இந்த நல்ல சிந்தனையை முன்வைப்பதிலே மகிழ்ச்சியடைகிறேன்.

## தமிழீழ மாணவர் எழுச்சி நாள் யூன் 06

எமது விடுதலைப் போராட்டத்தில் ஓர் எழுச்சி வடிவமாக உருக்கொண்டது மாணவர் போராட்டம். மாணவர் சக்தியினை அழித்தொழிப்பதன் மூலம் தமிழினத்தின் போராட்ட உத்வேகத்தை சிதைக்கலாம் என சிங்கள அரசு பல்வேறு வழிகளிலும் முயற்சித்து வருகின்றது. இதன் ஒரு வடிவமாகவே யாழ். இந்துக் கல்லூரி மாணவன் சஞ்சீவன் போன்றோரைச் சுட்டுக் கொலை செய்ததும், திவ்வியன் போன்ற பல்கலைக் கழக மாணவர்களை கைது செய்து சிறைகளில் இடடதும், பாடசாலைகளை இராணுவ முகாம்கள் ஆக்கியதும். எனினும் இவை அனைத்தையும் மாணவர் சமூகம் எதிர்கொண்டு இந்த தமிழின விடுதலைப் போராட்டத்திற்கு பலம் சேர்த்து வருவது வெளிப்படையான உண்மை.

இவ்வாறு பல்வேறுபட்ட நெருக்கடிகளுக்குள் இருந்து வந்த எமது தாயக விடுதலைப் போராட்டம் இன்று முக்கிய காலகட்டம் ஒன்றில் இருக்கிறது. புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகி 2 வருடங்கள் கடந்த நிலையிலும் தமிழ் மக்கள் வாழ்வில் இயல்பு நிலை ஏற்படவில்லை. இன்னமும் பல பாடசாலைகள் இராணுவ ஆக்கிரமிப்பாளர்களின் முகாம்களாக மாணவ சமூகத்திற்கு ஆத்திர மூட்டும் அசிங்கம் மிக்க ஒரு நரக லோகமாகவே காட்சி தருகிறது. ஆயிரமாயிரம் மாணவர்கள் சொந்த இடங்களுக்குச் செல்ல முடியாமல் அகதி முகாம்களில் அல்லலுருகின்றனர்.

நிலமைகள் இவ்வாறு இருக்க, திட்டமிட்ட வகையில் அரசு பேச்சு வார்த்தையினை இழுத்தடித்து சமாதான காலத்தில் புத்திஜீவிகளையும் தேசப்பற்றாளர்களையும் கொன்றொழிப்பதன் மூலம் எமது விடுதலைப் போராட்டத்தினை அழித்து விட பகற்கனவு காண்கின்றனர். சந்திரிகா அரசின் இந்த கபட நோக்கத்தினைப் புரிந்து கொண்டு எமது தேசியத் தலைவரின் கரங்களைப் பலப்படுத்தி தேசவிடு தலையை வென்றெடுக்க மாணவசமுகம் உறுதியோடு தொடர்ந்தும் செயற்பட வேண்டும்.

எமது மக்களின் விடுதலைக்காக அன்று மாணவனாக இருந்த சிவகுமாரன் தொடக்கம் பல்லாயிரம் மாணவர்கள் தமது இன்னுயிர்களைத் தியாகம் செய்துள்ளனர். எமது மக்களின் விடுதலை மாணவர் சமுகத்திடமே தங்கி இருக்கின்றது என்ற யதார்த்தத்தை புரிந்து கொண்டு மாணவர் சமுகம் அணிதிரளவேண்டும். தேச விடுதலைப் போராட்டத்தின் எந்த சக்தியாக மாணவர் சமுகம் திகழவேண்டும். எனவே மாணவர்கள் அனைவரும் இந்த உறுதியுடன் எதிர் வரும் யூன்-06 மாணவர் எழுச்சி நாளன்று அணிதிரண்டு மாணவர் எழுச்சியினை சிங்களப் பேரின வாதத்துக்கும் சர்வ தேசத்துக்கும் மீண்டும் தெரியப்படுத்துத்துவோம்.

(மாணவர் எழுச்சி நாளையொட்டி சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை வெளியிட்ட அறிக்கை)

கனகரவி

# நிமலராஜன், நடேசன்... எனத் தொடர்வதை அனுமதிக்க முடியாது



தமிழ் ஊடகவியலாளர்களை அச்சுறுத்தி தமிழர் தாயகத்தின் உண்மைகளை வெளித்தெரியாமல் தடுக்கலாமென எண்ணுகிறவர்களின் கொடும் செயலாகவே நடேசனை படுகொலை செய்தவர்களின் எண்ணம் இருந்திருக்கலாம். ஆனால்.. நடேசனை நாம் இழந்து போனது துயரம்தான் எனினும் நடேசனின் உயிரைப் பிரித்தவர்களால் நிச்சயமாக உண்மையினை வெளிப்படுத்தும் ஊடகவியலாளர்களை ஒரு போதும் தடுத்து விட முடியாது.

ஐம்பது வயதிலும் நடேசன் ஆர்வத்துடனும், துடிப்புடனும் அக்கறையுடனும் ஊடகத்துறையில் பணியாற்றியவர் பேரினவாதிகளின் கிழக்கின் மீதான கழுகுப் பார்வைக்கு முற்றுப் புள்ளி வைக்குமளவிற்கு பல ஆய்வுக்கட்டுரைகளை எழுதியதன் மூலம் தமிழரைத் தட்டி உசாரடைய வைத்தவர். கிழக்கின் நிலத்தைப் பல துண்டுகளாக கூறு போட எண்ணிய பேரினவாதிகளின் பல மோசமான செயற்பாடுகளையும் உலகிற்கு தெரியப்படுத்த தன்னாலான முயற்சிகளை மேற்கொண்டவர். இவரின் தேசியம் பற்றிய அக்கறை கண்டு போரினவாத சிந்தனையாளரிற்கு அச்சமிருந்து வந்தது. இதனால் இவரை மிரட்டும் வகையில் பேரினவாதக் கரங்கள் விசாரணை என்ற பெயர்களில் மிரட்டிப் பார்த்தனர்.

இனம் தெரியாதவரின் கைக்குண்டு வீச்சொன்றும் இவரின் வீட்டைநேக்கி வீசப்பட்டது. தொலைபேசி மிரட்டல்களும் இவர்ந்து இருந்தன.. என்னதான் இடர்கள் வந்த போதும் ஊடகத்துக்குள்ளால் இவரின் பணி வீச்சுடனிருந்தது. ஏராளமான இளம் ஊடகவியலாளர்களின் வருகைக்கு மத்தியல் தன்னால் துணிச்சலுடனும், துடிப்புடனும் பணியாற்ற முடியும் என்ற தன்மையினை செயற்பாட்டின் மூலம் களத்தில் நிரூபித்துக் காட்டியவர். நடேசனின் ஊடகத்துள்ளாலான செயற்பாடு எவருக்கு என்ன தாக்கத்தை ஏற்படுத்தியதோ தெரியவில்லை... ஆனால் இவரைக் கொலை செய்ய வேண்டிய தேவை என்ன? நடேசனின் எழுது கோலால் பாய்ச்சப்பட்டமை அவரின் குருதி குடிப்பதற்கு காரணமா, நடேசனின் உயிரை குடித்தவர்கள். தாமும் சடலமாக ஒரு நாள் இந்த உலக உருண்டையில் வீழ்வர்... ஆனால் நடேசனின் உடலத்திற்கு கிடைத்த கௌரவம் கொலைகாரர்களுக்கு கிடைக்கப்போவதில்லை. எமது தேசத்தில் எத்தனையோ அழிவுகள், துன்பங்களை நாம் காணுகின்றோம். அதனை உள்ளது உள்ளபடி சொல்லுவது எந்தவகையில் குற்றமாகக் கணக்கில் எடுக்கின்றனரோ? நடேசனின் உயிரைப் பிரித்தவர்களால் உண்மைகளை வெளிப்படுத்துவதை தடுக்கவே முடியாது.

ஒரு ஊடகவியலாளன் சேவை மனப்பாங்குடன் பணியாற்றும் போது குடும்பம் என்பதற்குள்ளிருந்து சற்று விலகியவனாக, வேறுபட்டவனாக பணியாற்ற வேண்டி ஏற்படுகின்றது.

குறிப்பிட்ட நேரத்திற்கென அலுவலகங்களில் பணிபுரிவது, சொந்தமாக தொழில் செய்வது என மனிதரின் தேவைக்கான பல்வேறுபட்ட தொழிலுக்குள் ஊடகத்துள் பணியாற்றுகின்றவன் முற்றிலும் வேறுபட்டவனாக உணர்வுகளைக் கட்டுப்படுத்தி - சமூகத்தின் தேவைகளை உணர்வுடன் வெளிப்படுத்த வேண்டியவனாக இருக்கின்றான். அதற்காக குடும்பத்தை நடுத்தெருவில் விட்டு விடுபவன் அல்ல... நேர காலத்தில் வீட்டில் காணமுடியாது, நேரகாலத்தில் உணவை உண்ண முடியாது. நித்திரை முழித்து செய்திகளைக் கொடுத்தால் தான் நித்திரை விழித்தெழுந்து செய்திகளைப் படிக்க முடியும். என்ற மனப்பக்குவத்துடன், தியாக உணர்வுடன் பணியாற்ற வேண்டும். நடேசன் அரச திணைக்களத்திலும் பணியாற்றிக் கொண்டு -ஊடகவியலாளனாகவும் செவ்வனே சேவை செய்தவர். இதனை ஒரு தொழில என்று பார்க்க முடியாது. நடேசனின் சேவை மனப்பாங்குடனான பணியினைத்தான் மக்கள் இன்று மதித்துள்ளனர். நடேசன வீட்டில் மனைவியிடம் சில வேளை சொல்லும் ஒரு விடயம்.

நான் செத்துப் போன பின் தான் என்னைப் பல பேருக்குத் தெரியும் என்று இதனை நடேசனை இழந்த பின் மனைவி பல தடவை கூறிக் கேட்க முடிந்தது. அத்துடன் கட்டுரைகளை எழுதத் தொடங்கியதும். யாரும் அவருடன் கதைக்கக் கூடாது அது தனது மூளையைக் குழப்பி விடும் என நடேசன் கூறுவார்.

இது போன்ற விடயங்கள் எல்லாம் அன்றாட வாழ்க்கையில் இலகுவானதென யாரும் எண்ணிவிட வேண்டாம். நடேசன் பொதுவான வேலைகளில் ஈடுபாடு கொண்டவரெனினும், தனது குடும்பத்தையும் நடுத்தெருவில் விடவில்லை. இருந்த போதும் அவர் இல்லாத குறையுடனிருக்கும் மனைவி பிள்ளைகளுக்கு உதவவேண்டியது, அவர் பணியாற்றிய நிறுவனத்தினதும் தமிழ் ஊடகங்களினதும், ஊடகவியலாளர்களினதும் கடமையாகும். கனேடிய தமிழ் வானொலி (C.T.R) இன் நேயர்கள் வட்டம் உடனடியாக நடேசனின் குடும்பத்தினருக்கு ஒன்றரை லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது. இது ஒரு முன் மாதிரியான செயற்பாடு. இது போன்றவற்றால் நடேசனின் இழப்பை ஈடுசெய்யலாம் என நான் நம்பவில்லை. ஆனால் குடும்பத்தினருக்கும் தேவையுள்ளதென இந்தச் செயற்பாட்டை ஊக்குவிக்க வேண்டும்.

மக்களின் பாதுகாப்பு பற்றிய அக்கறையுடன் எழுதியவனுக்கே.. பாதுகாப்பில்லை எனும் போது இனி மக்களிடம் செய்தி சேகரிக்க செல்பவர்களிடம் உங்களுக்கே பிரச்சினை நீங்கள் எங்கள் பிரச்சினைகளை வெளிப்படுத்தி என்ன நடக்கப் போகின்றது என்று கேட்பார்களோ என்ற கவலை துளியளவெனினும் வரத்தான் செய்கின்றது. இப்படியான கேள்வியுடையவர்கள் ஒன்றைப்புரிந்து கொள்ளுங்கள். ஊடகவியலாளன் என்றென்றைக்கும் பிரச்சினைகளை எதிர் நோக்கிய படிதான் பிரச்சினைகளை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறான்.

முல்லைமணி வே.சுப்பிரமணியம் ஒரு நிகழ்வில் வவுனியா நகரசபை மண்டபத்தில் உரையாற்றும் போது கூறினார். நான் ஒரு செய்தியானாக வேலை செய்தவன். ஒரு நாள் ஒரு செய்தியை பத்திரிகையில் எழுதியமைக்காக சிலர் திரண்டு வந்து எனது வீட்டை நோக்கி கற்களால் எறிந்தனர். அன்று அந்தத் தொழிலை விட்டவன், நான் எழுதுவதால் சோறும் இல்லை. பிரச்சினை என்றால் என்ன செய்வது? என்ற கேள்விக்குப் பின் இவர் கூறியது பத்திரிகைத் தொழில் கடினமானது, ஆபத்தானதன்று. இதில் உண்மை இல்லாமலில்லை இப்படியாக எதிர் பார்ப்புக்களுடன் பணியாற்ற முடியாதவர்கள் வேறு தொழிலைப் பார்கக வேண்டியதுதான். பத்திரிகைத் தொழில் சிரமமானது, ஆபத்தானது அர்ப்பணிப்புடன் செய்ய வேண்டியது.

இலங்கையைப் பொறுத்தவரையில் செய்திகளை இருட்டடிப்புச் செய்ய வேண்டும் என்று தணிக்கை, அச்சுறுத்தல் என... கொண்டுவருவதன் மூலம் எமது தேசியத்தை வலியுறுத்துவதை தடுக்கலாமென பார்ப்பது மடமைத்தனமாகவே நோக்கப்படுகின்றது.


நடேசனின் வாழ்வுடன் ஒன்றிய ஊடகத்துறை அவரின் மறைவிற்குப் பின் பிரகாசமாய் தெரிவதற்கு காரணம் அவரின் ஓயாத பணிதான். மக்களின் வாழ்வு பிரகாசமாய் இருக்க வேண்டுமென்பதற்காக பணியாற்றியவன் இன்று மக்களுக்கு பிரகாசமாக தெரிகின்றார். நடேசனைப் போன்ற பணியாற்றுகை இல்லையெனின் இந்தத் துறைக்குள் இருப்பதில் அர்த்தமில்லை. இன்னுமொரு மிக முக்கியமான விடயமாக எனக்கு நடேசன் பற்றி நினைவிற்கு வருவது தனியே பணத்திற்காகவோ அல்லது, பணபலம், அரசியற்பலம் உள்ளவர்களிற்கு பின்னால் வால் பிடித்து எழுதும் பழக்கம், தனிமனித சாடுகை என்பவற்றையும் நடேசன் தவிர்த்தே வந்துள்ளார்.

இவரை இலக்குப் பார்த்த கொலைகாரர்கள் அவரால் எழுதப்பட்ட, சொல்லப்பட்ட எதையும் அழிக்க முடியாதவர்களே. நடேசன் ஏராளமான கட்டுரைகளை எழுதிய போதும் அவரின் இன முரண்பாடுகளின் வரலாறு நூலாக்கப்பட்டது.

இந்த நூலின் வெளியீடு மட்டக்களப்பில் நடைபெற்றது. வெளியீட்டுரையை நடேசன் என்னை நிகழ்த்துமாறு கேட்டார். அந்த நிகழ்வில் கலந்து கொண்டன்று பலரின் வேண்டுகை கவனமாக எழுதுங்கள் என சொன்னதற்கு எனதுரையில் நடேசனை கவனமாக எழுதுமாறு கேட்காதீர்கள், கவசமாக நீங்கள் இருங்கள் என நான் அன்று அரங்கைப் பார்த்து கேட்டேன். நடந்தது என்ன?

எங்கள் நடேசன் உயிர் பறிக்கப்பட்ட நிலையில் இருந்து தீயுடன் சங்கமமாகும் வரை மக்கள் தமது உணர்வை வெளிப்படுத்தியுள்ளனர். இதனை ஓயவிடக் கூடாது. ஒரு தேசத்தில் ஊடகவியலாளன் முக்கிய சக்தி. அவன் மீது ஒடுக்கு முறைக் கரங்கள் கோரமாகப் பற்றிப் பிடிக்குமெனின் ஜனநாயகம்?

நடேசனின் படுகொலையால் எஞ்சியிருந்த ஜனநாயகத்துளியின் குரல் வளையும் நசுக்கப்பட்டு விட்டது. இதற்குப் பொறுப்பு அரசுதான்... நடேசனை மீண்டும் தர முடியாது... நிமலராஜன், நடேசன் என்று தொடரலும் கூடாது... இதற்காக மூழ்கிவிடாமல் குரல் கொடுக்க வேண்டிய பொறுப்பு ஊடகங்களுக்கும்,தமிழ் மக்களுக்கும் உள்ளது என்பதை எவரும் மறுத்து விடாதீர்கள்.



# ஆப்கானிஸ்தான் மோதல்களில் 17 தலிபான் போராளிகள் மரணம்!

(காபூல்)

தெற்கு ஆப்கானிஸ்தானில் இடம்பெற்ற மோதல் ஒன்றில் 17 போராளிகளைத் தாம் கொன்றிருப்பதாக அமெரிக்க இராணுவப் பெண் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

கந்தகார் மாகாணத்தில் ஆப்கானிஸ்தான் துருப்புக்களுடன் இணைந்து நடத்திய தாக்குதல் நடவடிக்கையின்போதே இந்த மோதல் இடம்பெற்றது.

இநதச்சம்பவத்தில் - உயிரிழந்தவர்கள் தலிபான் போராளிகள் என ஆப்கானிஸ்தான் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த மோதல்களில் அமெரிக்க கடற்படையினர் மூவர் சிறிய காயங்களுக்குள்ளானதாக அமெரிக்க இராணுவ பெண் பேச்சாளர் குறிப்பிட்டார்.

கந்தகார் மாகாணத்தில் அமெரிக்க - ஆப்கானிஸ்தான் படைகள் அமெரிக்க விமானப்படையினரின் உதவியுடன் கடந்த புதன்கிழமை இராணுவ நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்தனர்.

இதன்போது - 300 ஆப்கான் துருப்புக்களும், குறிப்பிட்டளவான அமெரிக்கத் துருப்புக்களும் தலிபான்களை எதிர்கொண்டு, மலைப் பகுதியில் மோதியதாக கந்தகார் மாகாண அரசின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

இந்த நடவடிக்கையில், 13 தலிபான்கள் கொல்லப்பட்டுள்ளதுடன், 8 பேர் சிறைபிடிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

இதேவேளை - புதன்கிழமை தம்மால் எம்.எஸ்.எவ் தொண்டர்கள் ஐவர் கொல்லப்பட்டார்கள் எனவும், இவர்களில் மூவர் வெளிநாட்டவர்கள் என்றும் - இந்தச்சம்பவம் வடமேற்கு ஆப்கானிஸ்தானில் இடம்பெற்றதாகவும் தலிபான்கள் அறிவித்துள்ளனர்.



இதையடுத்து எம்எஸ்எவ் மருத்துவக்குழு ஆப்கானிஸ்தானில் தனது நடவடிக்கையை நிறுத்தியுள்ளதாகவும் தெரியவருகிறது.

## கர்ப்பிணிப் பெண்ணின் வயிற்றை வெட்டி கருப்பையிலிருந்த சிசுவை கடத்திய பெண்

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த எட்டுமாதக் கர்ப்பிணிப் பெண்ணின் வயிற்றை வெட்டி கருப்பையிலிருந்த சிசுவைக் கடத்திச் சென்ற பெண், பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இந்தத்துணிகரச் சம்பவம் கொலம்பியாவில் இடம்பெற்றது. இந்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மேற்படி கர்ப்பிணிப்பெண்ணின் வயிற்றை சிலரின் உதவியுடன் குறித்த பெண் சமையலறையில் பாவிக்கப்படும் கத்தியைப்பயன்படுத்தி வெட்டி, கருப்பையிலிருந்த குழந்தையை எடுத்துக்கொண்டு தப்பியோடியுள்ளார். பின்னர் நடந்த தேடுதலின்போது, அந்தப்பெண் கொலம்பியப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

எனது வயிறு வெறுமையாக இருந்ததை நான் உணர்ந்தேன். அத்துடன எனது குழந்தை அழுது கொண்டிருக்கும் சத்தத்தையும் நான் கேட்டேன் என, வயிறு கிழிக்கப்பட்ட கர்ப்பிணப் பெண் கூறினார். அத்துடன், எனது குழந்தையை ஒருவர் துணியால் சுற்றிக்கொண்டு ஓடுவதையும் நான் கண்டேன் எனவும் தெரிவித்தார்.

இந்தச் சிசுவைக் கடத்திய சம்பவத்திற்கு பின்னால் ஒரு பெண் இருக்கமாட்டாரெனவும், பின்னணியில் பலபேர் இருப்பார்களெனவும் கொலம்பியப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொலம்பியாவில் கப்பம் கொடுப்பதன் மூலம் இந்தச்சம்பவங்கள் போல பல சம்பவங்கள் இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## எல்லையோர பாதைகளைத் திறக்க இரண்டு கொரியாக்களும் இணக்கம்



வடகொரியா மற்றும் தென்கொரியா ஆகிய இரண்டு நாடுகளும், இருநாடுகளுக்குமிடையில் இதுவரை மூடப்பட்டுள்ள பாதையினை மீளத்திறப்பதற்கு இணக்கம் கண்டுளளன.

இந்த உடன்படிக்கையின்படி நான்கு இலட்சம் தொன் உணவுப் பொருட்களை வடகொரியாவிற்கு அனுப்ப தென்கொரியா உறுதியளித்துள்ளது.

இரு நாடுகளுக்குமிடையிலான ரயில் பாதைகளைத் திறந்து பரீட்சார்த்தமான முறையில் ரயில் சேவைகளை நடத்தவும் இரு நாடுகளும் இணங்கியுள்ளன.

இரு நாடுகளுக்குமிடையிலான இந்த நகர்வுகள்மூலம் இறுக்கமான முறையில் உள்ள இராணுவ கெடுபிடிகள் தளர்வடையும் என எதிர்பார்ககப்படுகின்றது.

கடந்த ஐம்பது வருடமாக இரு கொரிய நாட்டு எல்லைப்பகுதியும் இறுக்கமான பாதுகாப்பு காரணமாக மூடப்பட்டிருந்தது. இதனால் எவரும் இப்பகுதிகளால் பிரயாணம் செய்ய அனுமதிக்கப்படவில்லை. இங்கு மிதிவெடிகளும், கண்ணிவெடிகளும் புதைக்கப்பட்டிருந்தன.

தற்போது இரு நாடுகளும் படிப்படியாக உறவுகளை ஸ்திரப்படுத்தி வருகின்றன. இரு நாடுகளின் அதிகாரிகளுக்குமிடையில் வடகொரிய தலைநகர் பியோங் யாங்கில் நடந்த சந்திப்பிலேயே இருநாடுகளுக்குமான பாதைகளைத் திறப்பதெனவும், ரயில் பாதைகளைச் செப்பனிட்டு மீள ரயில் சேவைகளை ஆரம்பிப்பதெனவும் முடிவெடுக்கப்பட்டது.

அத்துடன், இருநாட்டு எல்லைப் பகுதியிலும் வியாபார நடவடிக்கைகளை ஆரம்பிக்கவும் இணக்கம் காணப்பட்டுள்ளது. இரு நாடுகளும் இணைந்து கைத்தொழில் நகரை வடகொரியாவின் எல்லையில் அமைக்கவும் உடன்பட்டுள்ளன.

இரு நாடுகளுக்கும் இடையில் இந்த உடன்பாடுகள் ஏற்பட்டதனை அடுத்து, இருநாட்டு சிரேஷ்ட படை அதிகாரிகளும் இருநாட்டு எல்லைப் புறத்திலும் பதற்றத்தைக் குறைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

## ஈராக்கின் தீர்வுத் திட்டத்திற்கு ஆதரவைத்தேடும் அதிபர் புஷ்!

ஐரோப்பிய நாடுகளுக்கான மூன்று நாள் விஜயத்தின்போது ஈராக் தொடர்பாக - அமெரிக்கா, மற்றும் பிரிட்டனால் முன்வைககப்பட்ட தீர்வுத்திட்டம் தொடர்பாக அந்தநாடுகளின் ஆதரவை அமெரிக்க அதிபர் புஷ் பெற்றுக்கொள்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்ததிட்டம் தொடர்பாக, அமெரிக்காவுடன் கூட்டுச் சேர்ந்துள்ள இத்தாலிய ஜனாதிபதியுடன், அங்கு சென்ற அமெரிக்க அதிபர் புஷ் நேற்றுக் காலை பேச்சுக்களை நடத்தினார்.

நேற்று முன்தினம் அதிபர் புஷ் ரோமிற்கு சென்றவேளை, அவரது வருகையை எதிர்த்து பெருமளவான மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது, அவர்கள் எமக்கு புஷ்ஷும் தேவையில்லை, போரும் வேண்டாமெனக் கோஷமிட்டனர்.



இதேவேளை, அதிபர்புஷ் போப்பாண்டவர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பரை சந்தித்தவேளை ஈராககில் இடம்பெற்றுவரும் போரை தாம் கடுமையாக எதிர்ப்பதாக போப்பாண்டவர் அதிபர் புஷ்ஷிற்கு தெரிவித்தார்.

இத்தாலிய ஜனாதிபதியுடனான நேற்றய சந்திப்பின் பின்னர் அமெரிக்க அதிபர் புஷ், பத்திரிகையாளர்களைச் சந்தித்து தனது இத்தாலிய விஜயத்தின் நோக்கம் தொடர்பாக விளக்கினார்.

இதன்பின்னர், அமெரிக்க அதிபர் புஷ் வரலாற்றுப் புகழ்மிக்க பிரான்ஸின் நோமான்டி பிராந்தியத்தில் இரண்டாம் உலகப்போரின்போது ஜேமன் படைகளை தோற்கடித்த அறுபதாவது ஆண்டு நிறைவு நிகழ்வில் கலந்து கொள்ள சென்றார்.

அதிபர் புஷ்ஷின் பிரான்ஸ் விஜயத்தின் போது, ஈராக் போர் தொடர்பாக பிரான்ஸ் ஜனாதிபதி ஜக்சிராக் கொண்டிருக்கும கடுமையான நிலைப்பாடுகளைப் போக்கி, ஈராக்கின் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாக பேச்சுவார்த்தை நடாத்துவார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.




## தீவிரவாதத்திற்கு எதிரான போரை தொடர்ந்து நடத்தவேண்டிய நிலை!

### அமெரிக்க பாதுகாப்புச் செயலர் ரம்ஸ்பீல்ட்



(சிங்கப்பூர்)

இஸ்லாமிய அடிப்பபடைவாதத்திற்கு எதிரான தொடர் போராட்டத்தை நடத்தவேண்டிய நிலையில் உலகம் இருப்பதாக அமெரிக்க பாதுகாப்பு செயலர் டொனால்ட் ரம்ஸ் பீல்ட் தெரிவித்தார்.

சிங்கப்பூரில் இடம்பெற்ற பாதுகாப்புக் கருத்தரங்கு ஒன்றில் பேசும் போதே ரம்ஸ் பீல்ட் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

இந்தக்கூட்டத்தில் அவர் மேலும் பேசியதாவது, தீவிரவாதத்துக்கு எதிராக அமெரிக்கா தலைமையில் நடத்தப்படும் போர் ஆரம்பநிலையிலேயே இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இது தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும். மேலும் - இந்தப் போராட்டத்தை விரைவில் முடிவுக்கு கொண்டு வருவதற்கான பொருத்தமான போரை ஆரம்பிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மேலும் பல தாக்குதல்கள் எதிர்காலத்தில் நடைபெறக் கூடும் என்பதில் சந்தேகம் இல்லை. ஆசிய நாடுகள் தீவிரவாதத்துக்கு எதிரான போரை நடத்த முன்வர வேண்டும்.

ஆசியாவின் பாதுகாப்புக் குறித்து அமெரிக்கா அதிக கரிசனை கொண்டிருக்கிறது. தென்கொரிய எல்லையில் நிறுத்தப்பட்டிருக்கும் 3500 அமெரிக்கத் துருப்புக்களை அமெரிக்கா ஈராக்கிற்கு அனுப்பும் என்றும் ரம்ஸ் பீல்ட் மேலும் தெரிவித்தார்.

## சவுதிப் படையினருடன் மீளவும் இஸ்லாமிய தீவிரவாதிகள் மோதல்!

இஸ்லாமியத் தீவிரவாதிகளுக்கும் சவுதிப் படையினருக்கும் இடையில் சவுதியின் ஜெட்டா நகரப்பகுதியில் துப்பாக்கிச்சண்டை இடம்பெற்றதாக ரொய்ட்டர் செய்தி ஸ்தாபனம் தெரிவித்தது.

ஓடிக்கொண்டிருந்த இஸ்லாமியத் தீவிரவாதிகளின் வாகனத்தில் இருந்தவர்களுக்கும், சவுதிப்படையினரின் வாகனத்தில் இருந்தவர்களுக்கும் இடையிலேயே இந்த துப்பாக்கிச்சண்டை இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்பின்னர், வாகனத்தில் இருந்த இஸ்லாமியத் தீவிரவாதிகள் அனைவரும் தப்பிச்சென்றுவிட்டனரெனவும், அவர்களைத் தேடி சவுதிப் படையினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை, அல்கொய்டா அமைப்பின் சவுதிக்கான தலைமைத் தீவிரவாதியான அப்துல் அஸீஸ - அல்முக்ரீன் நேற்றுமுனதினம் வெளியிட்ட அறிக்கையில் -



அமெரிக்காவுடன் இணைந்து சவுதி செயற்படுவதனால் சவுதியின் ஆட்சியை வீழ்த்தவேண்டுமெனவும், இந்த வருடம் சவுதி இரத்த ஆறு ஓடும் இடமாக மாறும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன், கடந்த புதன்கிழமை சவுதியின் கோபார் ஓயில் கம்பனி பணயக் கைதிகள் மீட்பு நடவடிக்கையின்போது சவுதிப்படையினர் இரண்டு இஸ்லாமியப் போராளிகளை சுட்டுக்கொன்றதையும் அவர் மறுத்துள்ளார்.

ஒஸாமா பின்லேடன் பிறந்த இடமான சவுதியில் வெளிநாடுகள் ஆதிக்கம் செலுத்துவதையிட்டு அல்கொய்டா ஆத்திரமடைந்துள்ளதாகவும், இதனாலேயே அந்த அமைப்பு அங்கு தாக்குதலை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

உலகச் சூழல் தினம் - யூன் 05



எங்கள் கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

சூழல் பாதுகாப்புப் பகுதி
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
தமிழீழ விடுதலைப்புலிகள்
தமிழீழம்.

World Environment Day - June 05

## கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

கடலில் சேரும் விவசாய உரங்களில் இருந்து பெறப்படும் நைதரசனினால் பல்கிப்பெருகும் பாதகமான அல்காக்கள் ஒட்சிசன் வாயுவைப் பயன்படுத்தித் தீர்ப்பதால், உலகம் பூராவும் 150 வரையான கரையோரப் பகுதிகள் 'இறந்த வலயங்கள்' ஆகியுள்ளன.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# ஜனாதிபதி பேச்சு நடத்த விரும்பினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயார்!

## இரா. சம்பந்தன் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி தமிழ்த்தேசிய கூட்டமைப்புடன் பேச்சக்களை நடத்த விரும்பினால் அவருடன் பேச்சுக்களை நடத்த தயாராக இருப்பதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று நடந்த சந்திப்பின்பின் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் இரா. சம்பந்தன் தெரிவிக்கையில் -

மக்கள் விடுதலை முன்னணி, இடைக்கால தன்னாட்சி அதிகாரம் குறித்து வெளியிட்ட கருத்து சம்பந்தமாக,ஜனாதிபதியே பொறுப் பேற்கவேண்டும்.

அரசாங்கத்தின் தலைவி என்ற வகையில் தமது அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும்,கட்சியை கட்டுப் படுத்தி வைக்கவேண்டிய பொறுப்பு, அவருக்கே இருப்பதாக சம்பந்தன் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகளோ அல்லது தமிழரசுக்கட்சியினரோ இது தொடர்பில் எந்த வலியுறுத்தலையும் மேற்கொள்ளமுடியாது .

தற்போதைய சமாதான பேச்சு வார்த்தைகளின் நிலைமை சம்பந்தமாக, தமிழரசுக்கட்சியினர் மாவட்ட ரீதியாகச் சென்று மக்களுக்கு விளக்கம் அளிப்பது என்றும் இன்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டது

ஜனாதிபதி தம்மை பேச்சுவார்த்தைக்கு அழைத்தால் அவருடன் அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் பேசத்தயார் என்றும் கூறினார். நேற்றைய சந்திப்பில், வடக்கு கிழக்கில் காணாமல் போனோர், மற்றும் அரசியல் கைதிகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

(01)

# ஐந்து புதிய எம்.பிக்கள் நாளை மறுதினம் பதவியேற்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த மூவரும், ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த இருவரும் நாளைமறுதினம் நாடாளுமன்றம் கூடும்போது சபாநாயகர் முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொள்ளவுள்ளனர்.

இந்த இரண்டு கட்சிகளினதும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவியில் ஏற்பட்ட வெற்றிடங்களுக்கென, கட்சியின் தேசியபட்டியலூடாக இவர்கள், நியமிக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற செயலாளர் ப்ரியானி விஜயசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் ஐவர் எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக தமது பதவிகளை இராஜினமா செய்ததையடுத்தே இந்த வெற்றிடங்கள் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்கத் தமிழ் மருத்துவர்கள் வன்னிக்கு விஜயம் செய்துள்ளனர்!

தமிழர்களின் தாயகப் பிரதேசத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழிருக்கும் பகுதிகளில் மருத்துவ சேவைகளை விருத்தி செய்யும் நோக்குடன் அமெரிக்காவிலிருந்து தமிழ் மருத்துவர்கள் குழுவொன்று வன்னிக்கு விஜயம் செய்துள்ளது.

தமிழ் சுகாதார அமைப்பு என்ற அமைப்பைச் சேர்ந்த மருத்துவர்களே வன்னிக்கு விஜயம் செய்துள்ளனர்.

வன்னியில் சுமார் ஒரு வார காலம் தங்கியிருக்கும் இந்த மருத்துவர்குழு, அங்கு பல சிறுவர் மருத்துவப் பராமரிப்பு நிலையங்கள் மற்றும் வசதிகளுடன் கூடிய மருத்துவ மனை ஒன்றை அமைப்பது தொடர்பாகவும் ஆராயவுள்ளதாக அந்த அமைப்புடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிதியுதவியுடன் இயங்கிவரும் இந்த அமைப்பு, ஏற்கனவே வன்னி மற்றும், வடக்கு, கிழக்கில் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பல்வேறு இடங்களுக்கான மருத்துவ உதவிகளை வழங்கிவந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற கத்திக்குத்தில் மாணவர் பலி!

சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் நேற்று மாலை இரண்டு குழுக்களுக்கிடையே இடம்பெற்ற மோதலில் மாணவர் ஒருவர் கொல்லப்பட்டார். கத்தியால் குத்தியே அந்த மாணவர் கொல்லப்பட்டதாக பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் சந்திம விஜய பண்டார தெரிவித்தார்.

இறந்த மாணவர் கலைப்பீடத்தில் 3 ஆம் ஆண்டு கல்விபயிலும் சம்பத் பண்டார என்று அடையாளம் காணபபட்டது. இந்த மாணவர் கத்தியால்குத்தப்பட்டு, களுகோவிலை வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்ட பின்னரே உயிரிழந்துள்ளார்.

அந்தக் கொலை தொடர்பாக மூன்று மாணவர்கள் கைதுசெய்யப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

### ஜோன் அமரதுங்க மீது விசாரணை

(கொழும்பு)

முன்னாள் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகளால் விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணியின் ஆட்சிக்காலத்தில் மே தினத்திற்கென திரட்டப்பட்ட நிதி தொடர்பில் இடம்பெற்ற மோசடி தொடர்பாகவே இந்த விசாரணை நடத்தப்பட்டது.

(01)

## மேலதிகாரியை...

படுகிறது. ஷார்ஜன்ட் தன்னை தொடர்ச்சியாக பழிவாங்கும் நோக்கில் தண்டனைகளை வழங்கி வந்ததாலேயே இந்த முடிவையெடுத்ததாக கடிதத்தில் எழுதப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (202)

## புலிகளுக்கு இடைக்கால...

வெளிநாடுகளில் இருந்து கிடைக்கும் கடன் அடிப்படையிலான நிதியுதவிகளை அவர்கள் செலவு செய்துவிட்டு, அந்தக் கடன்களை அரசாங்கம் செலுத்தவேண்டிய நிலை ஏற்படும். இது பொருத்தமானதல்ல இவ்வாறு செய்யவேண்டிய அவசியமும் இல்லை. இடைக்கால நிர்வாகத்தை அடிப்படையாகக்கொண்டு பேச்சுக்களை நடததுவதினால், அது நாட்டுககு பெரும் ஆபத்தாக முடியும்.

அத்துடன், விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பித்த பின்னரே, கடன் உதவிகளை வழங்க முடியும் என, சர்வதேச நாடுகள் மற்றும், நிதி நிறுவனங்கள் கூறுவது முற்றாக தவறானதாகும், ஏனெனில் இது எமது உள்நாட்டுப் பிரச்சினை.

என்றும், ஜெனரல் அனுரத்த ரத்வத்த மேலும் தெரிவித்தார்.

## பிரதியமைச்சரைக்...

அதிகாரிகளுக்கான கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடல் முடிவடைந்ததையடுத்து, அலுவலத்திற்கு அருகில் வான் ஒன்றில் வந்த இனந்தெரியாத குழுவினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் பிரதி அமைச்சரின் மெய்ப்பாது காவலராக இருந்த பொலிஸ் அதிகாரி ஒருவர் உயிரிழந்தார்.

இவருக்கு அருகில் நின்றிருந்த பாதாள உலகக் கோஷ்டியைச் சேர்ந்த ஆமிரோஸான் என்று அழைக்கப்படும், ரோஸான் எதிரிசூரிய என்பவருமே உயிரிழந்தவராவார்.

துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் காயமடைந்த இருவரும் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட வேளையில் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் 9 மி.மீற்றர் கைத்துப்பாக்கி பயன்படுத்தப்பட்டிருப்பதாக விசாரணையை மேற்கொண்டுவரும் பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதி அமைச்சர் சூரியாச்சாரியை குறிவைத்தே இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இந்தச்சம்பவம் தொடர்பாக தகவல் தெரிந்த பொதுமக்கள் தம்முடன் தொடர்புகொள்ளுமாறு பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(01)

## புலிகளிடம்...

யிரம் அடி நீளமான ஓடுபாதையைக் கொண்ட விமானத்தளத்துக்குத் தேவையான தொடர்பாடல் உபகரணங்களும் கடந்த வருடம் வெளிநாட்டில் இருந்து தருவிக்கப்பட்டிருப்பதாகவும் விமானப்படைத் தளபதி எயர் வைஸ் மார்ஷல் டொனால்ட் பெரேரா மேலும் தெரிவித்தார்.

## தமிழீழ மாணவர்...

யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது. காலை ,9 மணிக்கு பொது இடம் ஒன்றில் திரளும் மாணவர்கள் அந்தந்த பிரதேசத்தில் தெரிவுசெய்யப்பட்ட இடங்களை சென்றடைந்ததும், அங்கு எழுச்சிக் கூட்டங்கள் இடம்பெறும்.

யாழ்ப்பாணத்தில் .யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்திலும், வலிகாமத்தில் சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயத்திலும், தென்மராட்சியில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும், வடமராட்சியில் நெல்லியடி மகாவித்தியாலயத்திலும், தீவகத்தில் ஊர்காவற்றுறை பிரதேச சபை மைதானத்திலும், உரும்பிராயில் சிவகுமாரன் நினைவு சதுக்கத்திலும், காரைநகரில் யாழ்ற்றன் கல்லூரியிலும், நெடுந்தீவு மகா வித்தியாலயம், நயினாதீவு மகாவித்தியாலயம் ஆகிய இடங்களில் எழுச்சி நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

யாழ். இந்துக்கல்லூரி மைதானம், சங்கானை சிவப்பிரகாசம் வித்தியாலயம், சாவகச்சேரி இந்துக்கல்லூரி, அல்வாய் வித்தியாலயம் ஆகிய இடங்களிலும் இரவு 7 மணிக்கு மாணவர்களின் எழுச்சி நாள் கலைநிகழ்வுகள் இடம்பெறவுள்ளது.

## நாடாளுமன்றத்துக்கு உள்ளும்...

என்பது அவர்களுடைய கேள்வியாக இருந்தது. அந்தவகையில் நாங்கள் எங்களுடைய நிலைப்பாட்டைத் தெளிவாக்கி இருக்கிறோம். சமாதான முனனெடுப்புக்களின், நிலைபாடுகளை நாங்கள் அவர்களுக்கு தெளிவாக கூறியிருக்கிறோம்.

அந்தவகையில் அவர்கள் அதற்கேற்றவாறு முடிவுகள் எடுத்து நாடாளுமன்றத்திலேயும் வெளியிலேயும் தங்களுடைய செயற்பாடுகளைத் தீவிரப்படுத்துவார்கள்.

சர்வதேச சமூகத்தின் கரிசனையை இலங்கைத்தீவில் ஒரு சுமுகமான சூழ்நிலையைக் கொண்டு வந்து; சமாதான முன்னெடுப்பின் ஊடாக ஒரு தீர்வைக் கொண்டுவர வேண்டும் என்பது சர்வதேச சமூகத்தின் எதிர்பார்ப்பு ஆகும்.

அந்த எதிர்பார்ப்பை இன்றுள்ள அரசாங்கம் அதற்கு சாதகமான முடிவினை எடுத்து பேச்சுக்கான சூழலை உருவாக்குவதில், தயக்கம் காட்டுவது இன்றைக்கு சர்வதேச சமூகத்தின் மத்தியில் நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

அந்த அடிப்படையில்தான் சர்வதேச சமூகம் இவ்களுக்கான உதவியினை நிறுத்தியிருக்கின்றது. சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப் போகின்றது என்கின்ற ஒரு சூழ்நிலை உருவாகிக்கொண்டிருந்தது. இன்றைக்கு ஜனாதிபதி எடுத்திருக்கின்ற நிலைப்பாடும், ஜே.வி.பி இனவாதக் கூட்டுக்களின் காரணமாக அவரும் ஏற்கனவே எடுத்த நிலைப்பாடுகளில் இருந்து தயக்கம் காட்டுவதுபோல் தெரிகின்றது.

இது எதிர்காலத்தில் மட்டுமல்ல இன்று சமாதான முன்னெடுப்புக்களுக்கான நெருக்கடி நிலையைத் தோற்றுவித்துள்ளது.

உதவி வழங்கும் நாடுகளைப் பொறுத்த வரையில் அவர்கள் பல முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். பேச்சுக்கான ஒரு இணக்கப்பாடான சூழ்நிலையைக்கொண்டு வருவதற்கு பலமுறை முயன்றிருக்கின்றனர், பல நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றனர்.

தற்பொழுதும் பெல்ஜியத்தில் நடைபெற்ற நிதிவழங்கும் நாடுகளின் மாநாட்டில் அவர்கள் எடுத்துள்ள தீர்மானமும், அந்த அடிப்படையில்தான் இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தங்களைக் கொடுத்து பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டுவர முயற்சிக்கிறார்கள்.

ஆனாலும் இலங்கை அரசாங்கம் அவற்றுக்கு சாதகமான போக்கைக் கடைபபிடிக்கவில்லை என்பதே அதன் இன்றுள்ள நிலைப்பாடாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

பாடசாலை அதிபர்களே! மாணவ மணிகளே!

எமது ஸ்தாபனத்தின் 45 ம் வருட பூர்த்தியை முன்னிட்டு 20% - 50% வரையிலான கழிவுகள் பாடப் புத்தங்களுக்கும், புத்தங்களுக்கும் வழங்கப்படும்.

உங்கள் பிள்ளைகளுடன் இன்றே விஜயம் செய்யுங்கள்

மாணவர்களுக்கான பாடசாலை, பல்கலைக்கழக பாடப் புத்தகங்கள், புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள்கள், பாடசாலை உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள், தர உள்ளீட்டுப் பொருட்கள், மூலதனப் பொருட்கள், அழிபொருட்கள், வாத்தியக் கருவிகள், விளையாட்டுப் பொருட்கள், அலுவலக அலுமாரிகள், மேசைகள், பயில் அலுமாரிகள், புத்தக றாக்கைகள், ஆய்வுகூட இரசாயனப் பொருட்கள், ஆய்வுகூட உபகரணங்கள், O.H.P புறஜெக்ரர், றோணியோ மெசின், மனித உடற்கூறுகளின் கனவுருத் தொகுதிகள், தொலைநோக்கி கருவிகள் (வானியல்), நுணுக்குக் காட்டிகள்,கணினி நூல்கள் மற்றும் அறிவமுது, அந்திவானம் பதிப்பங்களின் பதிப்புகள், வெளியீடுகள் யாவும் நீங்களே தெரிவுசெய்து பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

212, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-2531)

சுன்னாகத்தில் மீண்டும் புதிதாக ஆமைக்கப்பட்ட

வாணி விலாஸ்

வேலையாட்கள் தேவை

- ★ வெளிநாட்டு, உள்நாட்டு சமையலாளர்
- ★ சமையல் உதவியாளர்
- ★ ஐஸ்கீறிம், சர்பத் மற்றும் குளிர்பான வகைகள் தயாரிப்பாளர்
- ★ தங்கி நின்று வேலை செய்வோருக்கு முன்னுரிமை
- ★ உணவு, தங்குமிட வசதி
- ★ தகுந்த வேதனம் வழங்கப்படும்

தகுதியுடையவர்கள் 8 ஆம் திகதிக்கு முன்னர் தொடர்புகொள்ளவும்.

உடன் தொடர்புகொள்ள வேண்டி முகவரி : வாணி விலாஸ் 76, K.K.S றோட், சுன்னாகம்.

உரிமையாளர் : வவா (சி/2633)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 06.06.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.